REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2023 டிசம்பர் 2 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

வரு. 91 இல. 286 | Saturday 02, December, 2023 | 14 பக்கங்கள் | 50/-

முதல் தடவையாக A/L வெட்டுப்புள்ளியின்படி

## தெரிவான பல்கலை, பாடநெறி குறுந்தகவலில் அறிவிக்க ஏற்பாடு



2022ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் 45,000 மாணவர்கள் பல்கலைக்கழக

06

வடக்கின் சுகாதாரத்துறை பிரச்சினைகள்

## வடக்கு MPக்களுடன் பேச்சு நடத்த தயார்



### விரைவில் வடமாகாணத்துக்கு விஜயம்

### சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடமாகாணத்தில் சுகாதாரத்துறையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக அம்மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற

06

## 'மஹாபொல' கொடுப்பனவை 2 மடங்காக அதிகரிக்க திட்டம்

### சபையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மஹாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை இரண்டு மடங்குகளாக அதிகரிப்பதே தமது நிலைப்பாடென்பதுடன், இது தொடர்பாக எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படுமெனவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

06

GCE O/L பரீட்சை பெறுபேறு

## 245,521 பேர் உயர் கல்விக்கு தகுதி; 13 ஆயிரத்து 588 பேர் '9 ஏ' சித்தி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

- 01ஆம் இடம் கண்டி மஹாமாயா
- 02ஆம் இடம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
- 06ஆம் இடத்தில் திருமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றுக்கமைய நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 45ஆயிரத்து 521 பேர் (72.07 சதவீதமானோர்) உயர் கல்விக்கு தகுதி பெற்றுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது 72.07 சதவீதமெனத் தெரிவித்த அமைச்சர், கடந்த வருடத்தில் க.பொ.த. சா/த பரீட்சைக்கு

06

சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட

# பாஸ்டர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு 13ஆம் திகதிவரை விளக்கமறியல்

## கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவு

மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை குலைக்கும் வகையில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு விரிவுரைகளை நடத்தியதாக குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட பிரடெரிக் கிறிஸ்டோபர் ஜெரோம் பெர்னாண்டோ அல்லது பாஸ்டர் ஜெரோம் என்பவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (01) உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் பிரடெரிக் கிறிஸ்டோபர் ஜெரோம் பெர்னாண்டோ அல்லது பாஸ்டர் ஜெரோம், மினுவாங்கொடை வீதி கட்டுநாயக்கவில் அமைந்துள்ள மிராக்கிள் டோம் நிறுவனத்தில் ஏப்ரல் 30ஆம் திகதி ஆற்றிய உரையில், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான மாநாட்டுச் சட்டத்தின் (ICCPR) கீழ் குற்றத்தை இழைத்தமைக்கான போதிய ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் முன்வைக்கப்பட்ட உண்மைகளின் பிரகாரம், விடுதலை செய்யப்படுவது சட்டத்தின் மீதான அடியாகுமென்பதால் நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

எல்லோரும் ஒன்றே, எவரும் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் இல்லை. விசாரணைகள் நிறைவடையவில்லை. ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மத்தகொட முன்வைத்த பிணைக் கோரிக்கையை நிராகரித்த நீதவான், சந்தேகநபர் தெரிவித்த கருத்து சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சாசனச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாகத் தவறு எனத் தெரிவித்தார்.

06



## இந்திய பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



COP28 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டுபாய் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துள்ளார். மாநாட்டின் அமர்வுகளுக்கு மத்தியில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததாகவும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவருடன் இணைந்து கலந்துரையாடுவது எப்பொழுதுமே அற்புதமானதெனவும், இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.



## வங்கக்கடல் தாழமுக்கம் இன்று புயலாக மாறும்

### 04ஆம் திகதி சென்னையினூடாக கடக்கும்

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி இன்று மற்றும் நாளை (03)

06

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு இந்தியா நிதி உதவி

### இந்திய தூதுவர் நேற்று ஆரம்பித்து வைப்பு



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி உதவித் திட்டத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் (30) உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு 3 நாள் விஜயம் மேற்கொண்டுள்ள நிலையிலேயே இந்திய உயர்ஸ்தானிகர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

06

## ஜப்பானில் நிர்மாணத்துறையில் இலங்கையருக்கு வேலைவாய்ப்பு

### பயிற்றப்பட்ட திறமையானவர்களுக்கு வாய்ப்பு; அமைச்சர் மனுஷ நாணயக்கார

ஜப்பானில் நிர்மாணத் துறையில் வேலைவாய்ப்புக்கு பயிற்றப்பட்ட திறமையான இலங்கைப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நிபுணத்துவ பரீட்சை நேற்று (01) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன்,

06



## தலைமன்னார் முதல் தனுஷ்கோடிவரை தரை வழிப்பாதை அமைக்க முயற்சி

### சாத்தியக்கூற்றாய்வுகள் முன்னெடுப்பு; இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



இலங்கையின் தலைமன்னாருக்கும் இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இடையில் தரைவழிப் பாதையை அமைப்பது தொடர்பான முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இதற்கான சத்தியக்கூற்றாய்வு செயற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இம்மாதத்துடன் இலங்கையில் தனது சேவைக்காலத்தை நிறைவு செய்யும் நிலையில் வடக்குக்கு 3 நாள் விஜயத்தை மேற்கொண்டார்.

அங்கு நடைபெற்ற சந்திப்புகளின் போது கருத்து

06



03

GCE A/L கற்க தகுதியானவர்களுக்கு

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து இம்முறையும் புலமைப்பரிசில்



03

### மாவீரர் தினத்தில் கைதானவர்களை விடுவிக்க விரைவில் உரிய நடவடிக்கை

செல்வம் எம்.பியின் கேள்விக்கு நீதி அமைச்சர் பதில்

## பஸ் கட்டணத்தில் எந்தவித மாற்றமும் இல்லை

### NTC, தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோதும், பஸ் கட்டணத்தில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாதென, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று தெரிவித்தது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் (30) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்

14

## GCE O/L பெறுபேறுகள் நேற்று வெளியாகின

### www.results.exams.gov.lk மூலம் அறியலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடந்த 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தமது பெறுபேற்றை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk மற்றும் www.results. exams.gov.lk எனும்

14

2022 – 2023 கல்வி ஆண்டுக்கான

## பல்கலை அனுமதிக்கான Z –Score வெளியீடு

2022 2023ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய இஸட் ஸ்கோர் வெட்டுப்புள்ளிகள் (Z Score) மறு பரிசீலனைக்கு பின்னர் வெளியிடப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். இந்த வெட்டுப்புள்ளிகள் 2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த.

06

UNIVERSITY GRANTS COMMISSION

வடக்கு, கிழக்கில் செயலிழந்துள்ள

## கைத்தொழிற்சாலைகளை மீள திறக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சபையில் அங்கஜன் இராமநாதன் எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த காலங்களில் பாதிக்கப்பட்ட கைத்தொழில் துறைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென, பாராளுமன்ற

14

## கல்முனை சீர்திருத்த பாடசாலையில் மட்டு. நகர் சிறுவன் மர்ம மரணம்

### மரணத்தில் சந்தேகமென தந்தை தெரிவிப்பு

மட்டக்களப்பு, கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஆனந்ததீபன் தர்சான்ந் எனும் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன், கல்முனை சீர்திருத்தப் பாடசாலையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக, சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் 17ஆம் திகதி மணியொன்றை திருடிய குற்றச் சாட்டில் கொக்குவில்

06

அகில இலங்கை ரீதியில்

## ஆறாம் இடம் பெற்று திருமலை மாணவி சாதனை



**திருகோணமலை தினகரன் நிருபர்**

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தர்சனா கோணேஸ் க.பொ.த. சா/த பரீட்சை பெறுபேறுகளின்படி அகில இலங்கை ரீதியில் 6ஆவது இடத்தை பெற்றுள்ளார். பரீட்சைக்கு

06

## டயனா, ரோஹண, சுஜித் மூவருக்கும் சபை அமர்வுகளுக்கு ஒரு மாதத் தடை

### சபாநாயகருக்கு ஒழுக்கவியல், சிறப்புரிமை குழு பரிந்துரை







**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற வளாகத்தில் ஒக்டோபர் 20ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களான ரோஹண பண்டார மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோருக்கிடையில்

06

# சர்வதேச செய்திகள்

## சவூதியில் எண்ணெய் உற்பத்திக் குறைப்பு



அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை மசகு எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு 10 இலட்சம் பீப்பாய் அளவு குறைக்க உள்ளதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது. சார்வதேச சந்தையில் குறைந்து வரும் மசகு எண்ணெயின் விலையை அதிகரிக்க எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக் பிளஸ்) எண்ணெய் உற்பத்தியை குறைத்தும் பலன் அளிக்காததால் சவூதி இம்முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்து சவூதி அரேபிய எரிசக்தித் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாளொன்றுக்கு 10 இலட்சம் பீப்பாய் அளவு எண்ணெய் உற்பத்தியை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 2024 மார்ச் மாதம் வரை இது அமுலில் இருக்கும்" என தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் ஜனவரி மாதம் ஒபெக் பிளஸ் கூட்டமைப்பில் பிரேசில் இணையவுள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 70 வயதில் இரட்டை குழந்தை பெற்ற பெண்



உகண்டாவில் 70 வயதுப் பெண் ஒருவர் இரட்டை குழந்தையை பெற்றுள்ளார். தலைநகர் காம்பாலாவில் உள்ள கருத்தரிப்பு மையத்தில் அறுவைச் சிகிச்சை மூலம் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தையை ஈன்றுள்ளார். செயற்கை முறையில் கருத்தரித்தே சபினா நமுக்வாயா என்ற அந்த முதிய பெண் குழந்தை பெற்றுள்ளார். தாயும் பிள்ளைகளும் நலமாக இருப்பதாகவும் அவர்கள் சிகிச்சை மையத்தில் இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

"70 வயதில் தம்மால் கர்ப்பமாகவோ குழந்தையைப் பார்த்துக்கொள்ளவோ முடியாது என்பார்கள். இப்போது எனக்கு இரட்டைப் பிள்ளைகள் உள்ளனர்" என்றார் நமுக்வாயா. 2020ஆம் ஆண்டு நமுக்வாயா பெண் குழந்தையைப் பெற்றார். எனினும் அதற்கு முன் அவருக்கு குழந்தைகள் இல்லை.

## இருவரை கொன்றவருக்கு: அமெரிக்காவில் வீச ஊசி மூலம் மரண தண்டனை



அமெரிக்காவின் ஒக்லாஹோமா மாநிலத்தில் இரு கொலைகளை செய்த 59 வயது ஆடவர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தக் கொலைகளை தற்காப்புச் செய்ததாக அந்த ஆடவர் வாதிட்டு வந்தார். மக்கலெஸ்டர் நகரில் இருக்கும் ஒக்லாஹோமா மாநில சிறைச்சாலையில் கடந்த வியாழக்கிழமை (30) விச ஊசி செலுத்தப்பட்டு பிலிப் ஹன்கொக் என்ற அந்த ஆடவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒக்லாஹோமாவின் மன்னிப்பு மற்றும் பரோல் சபை பிலிப்புக்கு பொது மன்னிப்பு வழங்கியபோதும் மாநில ஆளுநர் கெவின் ஸ்டிட் அதனை நிராகரித்துள்ளார்.

பைக்கர் குழுவைச் சேர்ந்த ரொபட் ஜெட் மற்றும் ஜேம்ஸ் லைன்ச் ஆகியோரை கொலை செய்ததற்காக பிலிப்புக்கு 2001 ஏப்ரலில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்த இருவரும் தம்மை கூண்டு ஒன்றுக்குள் அடைக்க முயன்றதை அடுத்தே அவர் மீது சூடு நடத்தியதாக பிலிப் குறிப்பிட்டார். அமெரிக்காவில் இந்த ஆண்டு 24 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் கைபேசிக்கு தடை



நியூசிலாந்து முழுவதும் பாடசாலைகளில் கைபேசிகள் தடை செய்யப்படும் என்று அந்நாட்டுப் பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்துள்ளார். மாணவர்களின் கவனம் சிதறாமல் இருக்க அது உதவும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்தில் சரிந்து வரும் கல்வியறிவு விகிதத்தைக் கையாள லக்சனின் அரசாங்கம் முயன்று வருகிறது. ஒரு காலத்தில் உலகின் சிறந்த கல்வியறிவு கொண்ட நாடுகளில் ஒன்றாக நியூசிலாந்து திகழ்ந்தது. ஆனால் அங்கு தற்போது படிப்புத் திறனும் எழுத்துத் திறனும் பெரியளவு சரிந்துள்ளன.

அங்கு கல்வியறிவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக கடந்த ஆண்டு ஆய்வாளர்கள் சிலர் எச்சரித்தனர்.

15 வயதுப் பிள்ளைகளில் சுமார் மூன்றில் ஒருவரால் கிட்டத்தட்ட அறவே படிக்கவோ எழுதவோ முடியவில்லை என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

# காசாவில் மீண்டும் போர்

## போர் நிறுத்தம் காலாவதி: இஸ்ரேலின் சரமாரி தாக்குதலில் போர் வெடித்த விரைவிலேயே 70 பலஸ்தீனர் பலி



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையில் ஒரு வாரமாக நீடித்த போர் நிறுத்தம் உடன்பாடு இன்றி முடிவடைந்ததை அடுத்து காசா மீது இஸ்ரேல் மீண்டும் பயங்கர தாக்குதல்களை ஆரம்பித்ததோடு பலஸ்தீன போராளிகளின் ரொக்கெட் தாக்குதல்களினால் தெற்கு இஸ்ரேலில் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.

போர் நிறுத்தம் நேற்று காலாவதியான விரைவிலேயே இஸ்ரேலிய போர் விமானங்கள் காசா பகுதியில் வட்டமிட ஆரம்பித்ததோடு தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் ஊக்கிர தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் அங்குள்ள குடிமக்கள் வீதிகளுக்கு ஓட்டம் பிடித்ததோடு அடைக்கலம் தேடி தூர மேற்கு பகுதியை நோக்கி செல்ல ஆரம்பித்தனர்.

கடந்த பல வாரங்களாக பிரதான போர் வலயமாக இருந்து வரும் வடக்கு காசா வானில் பெரும் கரும்புகை வெளிவந்தது. அங்கு துப்பாக்கிச் சத்தங்கள், குண்டு வெடிப்புச் சத்தங்கள் இடைவிடாது கேட்க ஆரம்பித்தன.

போர் நிறுத்தம் காலாவதியான இரண்டு மணி நேரத்துக்குள்ளேயே 35 பேர் கொல்லப்பட்டு பல டஜன் பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலிய போர் விமானங்கள் குறைந்தது எட்டு வீடுகள் மீது வான் தாக்குதல்களை நடத்தியதாக அது கூறியது.

தொடர்ந்து இடம்பெற்ற தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்ட நிலையில் நேற்று பின்னேரம் வரை உயிரிழப்பு எண்ணிக்கை 70 ஆக அதிகரித்திருந்தது. இதில் சுஜையா பகுதியில் உள்ள வீடுகள் மீது இடம்பெற்ற தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு காசா பகுதிகளான கான் யூனிஸ் மற்றும் ரபாவில் தாக்குதல்கள் தீவிரமாக இருந்தது என்று மருத்துவ வட்டாரங்கள் மற்றும் பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். தவிர மத்திய மற்றும் வடக்கு பகுதிகளை இலக்கு வைத்து தாக்குதல் இடம்பெற்று வருகின்றன.

"எனது மகன் இனஸே! எனக்கு உன்னைத் தவிர வேறு யாருமில்லை!" என்று கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனையின் நடைபாதை பகுதியில் தலை காயத்துடன் தூக்குப் படுக்கையில் இருக்கும் அனஸ் அன்வார் அல் மஸ்ரி என்ற பையனை பார்த்தபடி தாய் அழுது புலம்பினார். "அவன் எனது ஒரே மகன்!" என்று அவர் கூறினார்.

போர் நடவடிக்கையை ஆரம்பிப்பதாகவும் போர் விமானங்கள் காசா மீது தாக்குதல் நடத்துவதாகவும் இஸ்ரேல் இராணுவம் அறிவித்தது. முதலில் ரொக்கெட் தாக்குதல் நடத்தியும், தமது பிடியில் இருக்கும் அனைத்து பெண்களையும் விடுவிக்காமலும் ஹமாஸ் போர் நிறுத்த மீறலில் ஈடுபட்டதாகவும் அது குற்றம்சாட்டியது.

"எமது பணயக்கைதிகளை விடுவிப்பது, ஹமாஸை இல்லாதொழிப்பது மற்றும் இஸ்ரேலிய குடிமக்களுக்கு காசா ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது என்பதை உறுதி செய்யும் போர் இலக்குகளை அடைவதற்கு இஸ்ரேலிய அரசு கடமைப்பட்டுள்ளது" என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் தெரிவித்தது.

மேலும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான நிபந்தனைகளை நிராகரித்தது மற்றும் அதனை நீடிக்க மருத்து போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததற்கு இஸ்ரேல் பொறுப்பேற்க வேண்டும் என்று ஹமாஸ் கூறியுள்ளது.

"போர் நிறுத்தத்திற்கு முந்தைய ஐம்பது நாட்களில் இஸ்ரேல் சாதிக்காததை, போர் நிறுத்தத்திற்குப் பின்னரும் ஆக்கிரமிப்பைத் தொடர்வதால் சாதிக்க முடியாது" என்று ஹமாஸ் அரசியல் பிரிவு உறுப்பினரான இஸ்ஸத் அல் ரஷ்க் அந்த அமைப்பின் இணையதளத்தில் குறிப்பிட்டிருந்தார்.

போர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதை அறிவித்த ஹமாஸ் ஆயுதப் பிரிவு, போருக்குத் திரும்பும்படியும் காசாவை பாதுகாக்கும்படியும் தமது உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தது. இஸ்ரேலிய துருப்புகளுக்கும் பலஸ்தீன போராளிகளுக்கும் இடையே காசா நகரில் கடும் மோதல் நீடிப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கான் யூனிஸில் "எல்லா புகழும் இறைவனுக்கே" என்று அரபு மொழியில் கோசமிட்டுக்கொண்டு குழு ஒன்று வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட உடலுடன் வீதியில் சென்றது.

"இருந்ததை விடவும் தீவிரமாக போர் திரும்பியுள்ளது" என்று தெற்கு காசா நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் 22 வயதான அனஸ் அபூ டக்கா என்ற இளைஞன் தெரிவித்ததாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசவுக்கு அருகில் உள்ள பகுதிகளில் வசிக்கும் இஸ்ரேலிய குடியிருப்பு பகுதிகளில் ஏவுகணைகள் வருவதை எச்சரிக்கும் சைரன் ஒலிகள் எழுப்பப்பட்டன. இதனை அடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்ததோடு பாடசாலைகளும் மூடப்பட்டன.



### தொடரும் பேச்சுவார்த்தைகள்

கடந்த நவம்பர் 24 ஆம் திகதி ஆரம்பமாகி இரு முறை நீடிக்கப்பட்ட ஏழு நாள் போர் நிறுத்த காலத்தில் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு வந்ததோடு அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளையும் இஸ்ரேல் விடுவித்து வந்தது. அதேபோன்று இஸ்ரேலின் தாக்குதல்களால் பேரழிவை சந்தித்திருக்கும் காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகள் செல்லவும் வழிவகுக்கப்பட்டது.

இதன்போது எண்பது இஸ்ரேலிய பெண் மற்றும் சிறுவர்களாகிய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதோடு இஸ்ரேல் சிறையில் இருந்து 240 பலஸ்தீனர்கள் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட அனைவரும் பெண்கள் மற்றும் பதின்ம வயதைச் சேர்ந்தவர்களாவர். தவிர பிரதானமாக தாய்லாந்து தொழிலாளர்கள் உட்பட 25 வெளிநாட்டு பணயக்கைதிகளும் தனியான உடன்படிக்கையின் கீழ் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் பணயக்கைதிகளை தொடர்ந்து விடுவிப்பதற்கான தீர்வொன்றை எட்டுவதில் மத்தியஸ்தர்கள் தோல்வியை சந்தித்துள்ளனர். இதில் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டிருப்பவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும் நிலையில் விடுவிக்கப்படுவோரில் ஆண் பணயக்கைதிகளை சேர்ப்பதிலேயே உடன்பாடு எட்டத் தவறியுள்ளது.

இந்நிலையில் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம்பெற்ற வருவதாக மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்டார் கூறியுள்ளது. எனினும் காசா மீது இஸ்ரேல் குண்டுவீச ஆரம்பித்திருப்பது நிலைமையை சிக்கிலாக்கி இருப்பதாக அது கூறியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி 1,200 பேரை கொன்று சுமார் 240 பேரை பணயக்கைதிகளாக பிடித்த ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாக இஸ்ரேல் சூளுரைத்து வருகிறது. மறுபுறம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலின் அழிவை தனது கொள்கையாகக் கொண்டுள்ளது.

இஸ்ரேலின் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் தரைவழி தாக்குதல்கள் காசாவின் பெரும் பகுதியை அழிவுக்கு உட்படுத்தியுள்ளது. ஏற்கனவே போர் நிறுத்தத்திற்கு முன்னர் ஏழு வாரங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 15,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டு பல்லாயிரம் பேர் காணாமல்போயுள்ளனர். பலஸ்தீன சுகாதார அமைச்சின் இந்த புள்ளி விபரத்தை ஐக்கிய நாடுகள் சபையும் உறுதி செய்துள்ளது.

2.3 மில்லியன் மக்கள்தொகை கொண்ட காசாவில் 80 வீதமானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டிருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது. அந்த குறுகலான நிலத்தில் பெரும்பாலான மக்கள் தற்காலிக முகாம்களில் எந்த அடிப்படை வசதியும் இன்று அடைக்கலம் பெற்றுள்ளனர்.

காசாவில் இஸ்ரேல் முழு முற்றுகையை செயற்படுத்தியதோடு போர் நிறுத்த காலத்தில் அங்கு வந்த உதவிகள் அங்கே இருக்கும் தேவைகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருப்பதாக குடியிருப்பாளர்கள் மற்றும் மனிதாபிமான நிறுவனங்கள் தெரிவித்தன.

போர் வெடித்த பின் மூன்றாவது முறையாக பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேலிய மற்றும் மேற்குக் கரையின் பலஸ்தீன அதிகாரிகளை சந்தித்திருந்தார். எனினும் போர் நிறுத்தம் முறிந்திருப்பது குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க அவர் மறுத்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு அமையவே காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பின் நிறைவேற்றுச் சபை தலைவர் அலி தமூஷ் குற்றம் சாட்டியுள்ளார்.

"ஆரம்பத்தில் இருந்தே இந்தப் போர் பலஸ்தீன மக்களுக்கு எதிரான அமெரிக்காவின் போராக இருந்து வருகிறது, மேலும் அனைத்து அமெரிக்க நிலைப்பாடுகளும் நிகழ்வுகளின் போக்கும் அமெரிக்கா ஒரு பங்காளி மட்டுமல்ல, இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் சக்தியாக இருப்பதை காட்டுகிறது" என்று அவர் விடுத்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தொடர்ந்து தனது சுற்றவளைப்புகள் மற்றும் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஜெனின், ஹெப்ரோன், துல்கரம் மற்றும் ரமல்லா உட்பட பல இடங்களில் இடம்பெற்ற தேடுதல்களில் குறைந்தது 12 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேல் குறைந்தது 3,400 பேரை கைது செய்திருப்பதாக பலஸ்தீன கைதிகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## பொதுமக்களை பாதுகாக்க இஸ்ரேலுக்கு அழுத்தம்



காசாவில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு முன் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேலிடம் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் காசாவில் போர் வெடித்த பின் மூன்றாவது முறையாக மத்திய கிழக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நிலையிலேயே பிளிங்கன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தற்காப்பு உரிமைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிப்பதாகக் கூறியிருக்கும் அவர், தெற்கு காசாவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தால் இஸ்ரேல் சர்வதேச சட்டங்களை மதித்து, பொதுமக்களை பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் கடந்த ஒன்றரை மாதமாக இடைவிடாது நடத்திய தாக்குதல்களில் 15,000க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு இதில் 6,000க்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர். பாரிய உயிரிழப்புகள் மற்றும் காசா பகுதியில் ஏற்பட்டிருக்கும் அழிவுகள் சர்வதேச அளவில் கண்டனத்தை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் காசாவில் உள்ள பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் வீடுகள் மீது தாக்குதல்களை நடத்திய நிலையில் குறைந்தது 7,000 பேர் தொடர்ந்தும் காணாமல்போயுள்ளனர்.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2023 டிசம்பர் 2 சனிக்கிழமை



GCE A/L கற்க தகுதியானவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து

# இம்முறையும் புலமைப்பரிசில் ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ள மாணவர்களுக்கு கடந்த வருடத்தைப் போன்று, இந்த வருடமும் ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் மேற்படி புலைமைப்பரிசில் திட்டம் நேற்று (01) ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி நாட்டிலுள்ள 100 கல்வி வலயங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு கல்வி வலயத்தில் இருந்து 50 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, 5,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா புலைமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

கடந்த வருடத்தில் 3,000 மாணவர்களுக்கு 24 மாதங்களாக ஜனாதிபதி நிதியத்தினால் புலைமைப்பரிசில் வழங்கப்பட்டது.

2022 (2023) ஆண்டில் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றி, சித்தியடைந்து உயர்தரம் பயில்வதற்கு தகுதி பெற்றிருப்பது, அரச அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையில் கல்வி கற்பது, குடும்ப மாத வருமானம் 100,000 ரூபாவுக்கு குறைவாக இருப்பது இந்த புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க அடிப்படை தகுதியாக கருதப்படுகிறது. இந்த புலைமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கான விண்ணப்பப்படிவத்தை ஜனாதிபதி செயலகம் **presidentsoffice.gov.lk**, ஜனாதிபதி நிதியம் **presidentsfund.gov.lk** ஜனாதிபதி ஊடகப் பிரிவு **pmd.gov.lk** ஆகிய இணையத்தளங்களில் தரவிறக்கம் செய்யலாம்.

அந்த விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து சாதாரண தரம் கற்ற பாடசாலை அதிபர்களிடத்தில் கையளிக்கப்பட வேண்டும். இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாடசாலை மாணவர்கள் மற்றும் அதிபர்களின் ஒத்துழைப்பை ஜனாதிபதி நிதியம் எதிர்பார்க்கிறது.

# மாவீரர் தினத்தில் கைதானவர்களை விடுவிக்க விரைவில் உரிய நடவடிக்கை

## செல்வம் எம்.பி.யின் கேள்விக்கு நீதி அமைச்சர் பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மாவீரர் தினத்தன்று பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வடக்கில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வது தொடர்பாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று நீதி, அரசியலமைப்பு, மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் நீதி அமைச்சரிடம் வேண்டுகோளொன்றை முன்வைத்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கடந்த மாவீரர் தினத்தன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்துள்ள தமது உறவுகளை நினைவுகூருவதற்கு வருடத்தில் ஒரு தினத்தில் அம் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த நீதி அமைச்சர், இக்கைதுக்கான காரணம் என்னவென்று நான் அறியவில்லை. எனினும், இது தொடர்பாக ஆராய்ந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி இது சம்பந்தமாக அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

# கிழக்கு ஆளுநருக்கு செக் குடியரசு பாராட்டு



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் சேவைக்கு செக் குடியரசு தனது பாராட்டை தெரிவித்துள்ளது. செக் குடியரசு தொடர்ந்து கிழக்கு மாகாணத்தை அவதானித்து வருவதுடன், தற்போது குறுகிய காலத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்மாகாணத்தில் பல வருடகாலமாக நிலுவையிலிருந்த வேலைத் திட்டங்களை நிறைவு செய்து, மக்களுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். மக்களுக்காக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளதாகவும், செக் குடியரசு தனது பாராட்டில் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான செக் குடியரசுத் தூதுவர் டாக்டர் லோலித கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் மற்றும் மத நல்லிணக்க செயற்பாடுகளை அவதானித்ததாக தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சி தலைவரினால் நிலையியற் கட்டளை துஷ்பிரயோகம்

## சபாநாயகர் உரிய தீர்மானம் எடுக்க வேண்டும் சபையில் பிரதமர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் 27/ 2 ல் கேள்விகளை எழுப்பும்போது நிலையியற் கட்டளையை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பில் சபாநாயகர் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் 27/2ல் கேள்விகளை எழுப்பிய போது குறித்த கேள்விக்கு மேலதிகமாக மேலும் கேள்விகளை எழுப்பினார். அதன்போது அவர் எழுப்பிய எந்த கேள்விக்கு பதில் கூற வேண்டும்? என பதில் கூறுவதற்காக தயாராகவிருந்த இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர சபாநாயகரிடம் வினவினார்.

அதன்போது சபையில் ஏற்பட்ட சர்ச்சையின் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது மேலும் தெரிவித்த பிரதமர், 27/2 இன் கீழ் கேள்விகளை எழுப்பும் போது அதற்கு மேலதிகமான கேள்வியையும் எழுப்ப முடியுமா? என கேள்வி எழுப்பியதுடன், அது தொடர்பில் உத்தரவொன்றை சபாநாயகர் பிறப்பிக்க வேண்டும் என்றும், நாளை முதல் அது நடைமுறைக்கு வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த பிரதமர், சபாநாயகருக்கோ அல்லது எதிர்க்கட்சித் தலைவருக்கோ தேவையான விதத்தில் நிலையியற் கட்டளையை துஷ்பிரயோகம் செய்ய முடியுமானாலும் ஆளும் கட்சி அவ்வாறு செயற்படாது. தாம் பாராளுமன்றத்திலிருந்து விலகிச் செல்லும் தினத்திலும் குறித்த நிலையியற் கட்டளை எதிர்காலத்திற்காக பாதுகாத்து வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மலையக மறுமலர்ச்சிக்கு பிரிட்டன் ஆதரவு வழங்கும்



மலையக மறுமலர்ச்சிக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவதாக, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அண்ட்ரூ பற்றிக் உறுதியளித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (01) அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், கொள்கை ரீதியில் ஏற்படவுள்ள மாற்றங்கள், எதிர்கால வேலைத்திட்டங்களுக்கான வியூகங்கள் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்புடன் குடிநீரை தடையின்றி வழங்குவதற்காகவும் நீர் கட்டமைப்பை ஒரு பொறிமுறையினுள் கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம் தொடர்பாகவும் தூதுவரிடம் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மலையக பெருந்தோட்ட பகுதிகளின் நிலைவரம், அதனை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், அதற்கு பிரிட்டன் எவ்வாறு பங்களிப்பு வழங்க முடியுமென்பது தொடர்பாகவும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

சமகால அரசியல் நிலைவரம், அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் சம்பந்தமாகவும் கருத்தாடல் நடைபெற்றது.

அமைச்சர் கூறிய விடயங்களை செவிமடுத்த தூதுவர், தமது தரப்பிலிருந்து தேவையான உதவிகள் வழங்கப்படுமெனவும் உறுதியளித்துள்ளார்.

சுகாதாரத்துறைக்கு

# நிதி, தொழில்நுட்ப உதவி வழங்க WHO வதிவிட பிரதிநிதி இணக்கம்



இலங்கையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தொழில் நுட்பம் மற்றும் மருத்துவ உதவிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகளால் ஏற்படும் எதிர்ப்பை தடுப்பதற்கான ஆதரவு மற்றும் அடுத்த 10 ஆண்டுகளுக்கு சுகாதார முன்னறிவிப்புகளை தயாரிக்க வேண்டிய அவசியம் ஆகியவை உட்பட நிதி ஆதரவை வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் ஒப்புக்கொண்டுள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளர், டொக்டர் பாலித மஹிபால மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வதிவிடப் பிரதிநிதி டொக்டர் அலகா சிங்குக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று (01) சுகாதார அமைச்சில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் சுகாதார சேவைத் துறைகளை மேம்படுத்துவதற்கு உலக சுகாதார நிறுவனத்துக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்க டொக்டர் அலகா சிங் ஒப்புக்கொண்டுள்ளார்.

# பயாஸ் - ரட்ணம்; சுப்பர் சன்ஸ் வழங்கும் வசந்த கீதங்கள்




தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் இசைத்துறையில் 40 ஆண்டு கால ஆற்றல் கொண்ட பயாஸ் ரட்ணம்;சுப்பர் சன்ஸ் வழங்கும் வசந்த கீதங்கள் இசை நிகழ்ச்சி நாளை 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பு 07, ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பயாஸ் சவாஹிர், கலைக்கமல் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இந்த இசை நிகழ்ச்சியை அனைவரும் இலவசமாக கண்டுகளிக்கலாம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# வட்டுக்கோட்டை இளைஞர் உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ். வட்டுக்கோட்டை இளைஞர் நாகராசா அலெக்ஸ் பொலிஸாரால் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை மேலும் சில சாட்சிகள் நீதிமன்றத்தில் தோன்றி தமது சாட்சியமளித்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் கடந்த 19ஆம் திகதி உயிரிழந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், நேற்றையதினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, சில சாட்சியங்கள் நீதிமன்றில் தோன்றி சாட்சியமளித்தனர். இந்நிலையில், இந்த வழக்கை எதிர்வரும் 4ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான், மறுநாள் 5ஆம் திகதி அடையாள அணிவகுப்பும் திகதியிட்டுள்ளார்.

பெற்றோல் விலை குறைந்தாலும்

# முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணத்தில் மாற்றமில்லை



எரிபொருள் விலை திருத்தம் காரணமாக முச்சக்கரவண்டிகளுக்கான கட்டண அறவீட்டில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட முடியாதென, முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் தெரிவித்தது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவாலும் ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 3 ரூபாவாலும் குறைக்கப்பட்டது. இந்நிலையிலும், முச்சக்கரவண்டிகளின் கட்டண அறவீட்டைக் குறைக்க முடியாதெனவும், முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் மேலும் தெரிவித்தது.

க.பொ.த. சா/த பரீட்சையில்

# சித்தியடைந்த மாணவர்களுக்கு சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து



இம்முறை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கும் மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்த அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிகளை எடுக்கும் குழு உறுப்பினருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இம்முறை தமிழ் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் சிறந்த முறையில் உள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி, விடா முயற்சியுடன் செயற்பட்டு அர்ப்பணிப்பும் கடின உழைப்புக்கும் கிடைத்த வெற்றியாக இந்த பெறுபேறுகள் அமைந்துள்ளன. இப்பரீட்சையில் ஆர்வத்துடன் தோற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், ஏதோவொரு சந்தர்ப்ப சூழ்நிலையால் வெற்றி பெற முடியாமல் போன மாணவர்களுக்கும் இதுவொரு முடிவு அல்ல. இதுவே ஆரம்பப்புள்ளி. எனவே, மனந்தளராமல் தமது முயற்சியை கைவிடாது தொடர்ந்தும் கல்வி நடவடிக்கையிலும் அடுத்து எதிர்கொள்ளவுள்ள பரீட்சையிலும் கவனத்தை முழுமையாக செலுத்தி பல சாதனைகளை படைக்க வேண்டும்" என்றார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 17

### குறள் தரும் சிந்தனை



நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

வறுமையெனும் துன்பத்திற்குள்ளிருந்து பல்வேறு வகையான துன்பங்கள் கிளர்ந்தெழும்.

## உணவுகளை ஆக்கிரமித்துள்ள நச்சு இரசாயனப் பொருட்கள்!

உணவுப் பொருட்களில் கலப்படம் என்பது அன்றைய காலத்தில் நுகர்வோர் அனுபவித்து வந்த பெரும் பிரச்சினையாகும். அன்றைய காலத்தில் மக்கள் உண்ணுகின்ற ஏராளமான பொருட்களில் கலப்படங்கள் செய்யப்பட்டன. மக்கள் தரமற்ற உணவுப் பொருட்களை உட்கொண்டது ஒருபுறமிருக்க, கடுமையாக நோய்வாய்ப்படும் நிலைமைக்கும் ஆளானார்கள்.

ஆனால் கலப்படம் என்பது காலப்போக்கில் படிப்படியாக மறைந்து போய் விட்டது. கலப்படத்துக்குப் பதிலாக உணவுப் பொருட்களை இரசாயனப் பதார்த்தங்கள் ஆள்கொள்ளத் தொடங்கின. அதுவும் எமது உடலுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய மோசமான இரசாயனங்கள் உணவுப் பொருட்களை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

இதன் விளைவினால் மனித உடல்ஆரோக்கியம் மிகவும் மோசமான பாதிப்புக்கு உள்ளானது. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய புற்றுநோய்கள், சிறுநீரக செயலிழப்பு, இருதய வியாதிகள் என்றெல்லாம் தொற்றாநோய்கள் மக்களை ஆட்கொள்ளத் தொடங்கின. அந்தப் பாதிப்புகளிலிருந்து மீள முடியாதவர்களாக மக்கள் உள்ளனர்.

நிறமூட்டிகள், சுவையூட்டிகள், மணமூட்டிகள் மற்றும் உணவைப் பழுதுபடாமல் பாதுகாத்து வைத்திருக்கக் கூடிய இரசாயனங்கள் என்றெல்லாம் எமது அன்றாட உணவுப் பொருட்களில் இடம்பிடித்துள்ள இரசாயனங்கள் இன்று ஏராளம்.

வெள்ளைநிற அரிசியை தவிட்டு அரிசியாக்கிக் காட்டுவதற்காக செந்நிற சாயத்தைப் பயன்படுத்துவதாக ஊடகங்களில் பலதடவை செய்திகள் வெளிவந்துள்ளன. சிவப்பு அரிசிக்கு சந்தையில் மவுசு அதிகம். அதன் விலையும் அதிகம். எனவே வெள்ளை அரிசியை சிவப்பு அரிசியாக மாற்றுகின்ற மோசடி இடம்பெறுவதாக தகவல்கள் வெளிவருகின்றன.

அரசிக்குச் சாயம் இடுவதென்றால் அதன் பாதிப்பு மனித உடலில் எத்தனை மோசமாக இருக்குமென்பதை கூறத் தேவையில்லை. சாயம் என்பது இரசாயனம் கலந்த பொருள் என்பதை மறந்து விடலாகாது. எமது உடலின் அத்தனை உறுப்புகளையும் பாதிக்கின்ற இரசாயனப் பதார்த்தங்களையே நாம் எமது அன்றாட உணவின் வாயிலாக உள்ளெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

சில தினங்களுக்கு முன்னர் ஊடகமொன்றில் மற்றொரு திடுக்கிடும் செய்தியொன்று வெளியாகியிருந்தது. வெள்ளைச் சீனிக்கு சாயம் கலந்து பிறவுண் சீனியென்று கூறி விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.ஆகவே கடைகளில் சீனி வாங்குகின்ற போது நுகர்வோர் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டுமென்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நச்சு இரசாயனங்கள் மனிதருக்கு மாத்திரமன்றி, எம்மைச் சூழவுள்ள பிராணிகள் மற்றும் தாவரங்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. தரைச் சூழல், நீர்ச்சூழல், வளிமண்டலம் ஆகிய அனைத்துக்குமே நச்சுப் பொருட்கள் பெரும் பாதிப்புகளை உண்டாக்குகின்றன. நச்சுப் பொருட்களின் பாவனையானது அதிகரித்துச் செல்வதனால் அதனால் உண்டாகின்ற பாதிப்புகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

நாம் இன்று பயன்படுத்துகின்ற உணவுப் பொருட்கள் அனைத்திலுமே நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் இரண்டறக் கலந்து விட்டன. தானிய வகைகள், பழங்கள், காய்கறிகள், உபஉணவுப் பொருட்கள், மென்பானங்கள், பொதி செய்யப்பட்ட உணவுகள் என்றெல்லாம் எந்தவொரு உணவை எடுத்துக் கொண்டாலும், நஞ்சற்ற உணவைக் காண்பதே அரிதாகி விட்டது.

அனைத்துப் பயிர்களுக்கும் இடப்படுகின்ற பசளைகளில் நச்சு இரசாயனங்கள் கலந்திருக்கின்றன. பயிர்களுக்கு விசிறப்படுகின்ற பீடைநாசினிகள் அனைத்துமே கொடிய நச்சுப் பதார்த்தங்கள் ஆகும். உணவுப் பொருட்களை பழுதடையாமல் வைத்திருப்பதற்காக இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பழங்களைப் பழுக்க வைப்பதற்காக இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது.

எமது அன்றாட உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனத்தைத் தவிர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல. சுருங்கச் சொல்வதாயின் நச்சு இரசாயனங்களுக்கு நாம் பழகிப் போய் விட்டோமென்பதே உண்மை.

எமது அன்றாட உணவுகளே இக்காலத்தில் விஷமாகிப் போயுள்ளன. கடைகளில் விற்கப்படுகின்ற எந்தவொரு பீடைநாசினியையோ அல்லது உரவகைகளையோ விவசாயிகள் தடையின்றி வாங்கிப் பயன்படுத்துகின்ற நிலைமை ஆரோக்கியமானதல்ல. அதேபோன்று உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கும் அவ்வாறுதான் தாராளமாக இரசாயனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாம் அன்றாடம் உண்கின்ற அத்தனை உணவுகளுமே இன்று நஞ்சாகிப் போய் விட்டன. இவ்வாறான ஆபத்து தொடர்வதற்கு இனிமேலும் இடமளிக்கக் கூடாது. உணவில் நச்சுப் பதார்த்தங்கள் கலப்பதைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் காண்பதில் நாடு இனிமேல் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

## அனைத்துலக ஆண்கள் தினம்;

# தற்கொலை என்பது நம் உறவுகளுக்கு நாம் வழங்குகின்ற கொடிய வேதனை!




"வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்" என்ற பாடல் வரிகளை மறந்திருக்க மாட்டோம்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான் என்ற தொனிப்பொருளில்தான் இந்த வரிகள் அமைந்துள்ளன.

ஏமாற்றம், துரோகம், வறுமை, அவமானம், தோல்வி, மனஅழுத்தம், விரக்தி, இழப்பு, தனிமை , குடும்ப வன்முறை முதலான காரணங்களினால், எமது சமூகத்தில் தற்கொலைகள் நிகழுகின்றன.

பெண்விடுதலை, பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பேசுபொருளாகியிருக்கின்றன. ஆனால், ஆண்கள் சார்ந்த பிரச்சினைகளை 'ஆணாதிக்கம்' என்ற வரையறைக்குள் அடக்கிவிடும் தன்மைதான் அதிகரித்திருக்கிறது.

அதனால், எமது சமூகத்தின் மத்தியில் இது தொடர்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. இம்முறை அனைத்துலக ஆண்கள் தினத்தில் ஆண்களின் தற்கொலைகளை பேசுபொருளாக்கியிருக்கும் சூழலில் எமது கருத்துக்களை முன்வைக்கின்றோம்.

பெரும்பாலான வாழ்வியல் பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணத்தை அறிந்து, அதற்கேற்ப உரிய தீர்வை கண்டுபிடிக்காமல், பலரும் விபரீதமான முடிவுகளையே கண்டடைகின்றனர்.

உலக அரங்கிலும் பல புகழ்பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள், அரசியல் வாதிகள், விஞ்ஞானிகளும் கூட தற்கொலை செய்துகொண்டவர்கள்தான்.

அதற்கு நாம் அடல்ஃப் ஹிட்லர் முதல் கொண்டு பலரை உதாரணம் காண்பிக்க முடியும்.

### வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்? மனவிரக்கியுற்ற ஆண்கள் விழிப்படையட்டும்!

ஒருவர் தன்மீதான நம்பிக்கையை இழக்கும்போது, விரக்தியை நோக்கி நகருகின்றார். அந்த விரக்தி தொடருமானால், மனஅழுத்தம்தான் பெருகும். இறுதியில், தனக்கான முடிவை நோக்கி நகருகின்றார். இறுதியில் அனைத்து துயரங்களிலுமிருந்து விடுதலை யாவதற்கு ஒரே வழி தற்கொலைதான் என்ற தீர்வுக்கு வருகிறார்.

இந்தப்பதிவின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட பாடல் வரிகளைப்போன்றே மற்றும் ஒரு பாடல் வரியும் இருக்கின்றது.

"உனக்கும் கீழே வாழ்பவர் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"

ஆனால், தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என எண்ணுபவர்கள், தன்னை, தன்னைச் சூழவிருக்கும் குடும்பத்தினரை, உறவினர்கள், நண்பர்களை, பசுமை நிறைந்த நினைவுகளை அந்தக்கணத்தில் முற்றாக மறந்துவிடுகிறார்கள்.

இவர்களைப்போன்றவர்களுக்காகவே விஞ்ஞான உலகில் மருத்துவர்கள், உலநள சிகிச்சையாளர்கள், சீர்மியத் தொண்டர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் சமூகத்தில் குறிப்பாக இலங்கையிலும் இலங்கைத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும், தற்கொலை மரண அவலம் தொடருகின்றது. அதேசமயம், உளவள சிகிச்சை நிலையங்களும் பெருகியிருக்கின்றன.

நகரீகம் வளர்ச்சியடைந்த மேல்நாடுகளில், இயங்கும் மருத்துவமனைகளில் உளவள சிகிச்சைக்காகவே தனியான பிரிவுகளும் இயங்குகின்றன.

அத்தகைய நாடுகளிலும் தற்கொலை மரண வீதம் அதிகரித்து காணப்படுகிறது.

பின்விளைகளைப்பற்றி சற்றேனும் சிந்திக்காமல், தவறான செயல்களை செய்துவிட்டு, சமூகத்தில் அம்பலமாகும்போது, அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டவர்கள் பற்றிய செய்திகளை படித்திருக்கின்றோம்.

பேராசை பெருந்தரித்திரம் என்பதை புரிந்துகொள்ளாமல், தவறான வழிகளில் பொருளீட்டி, திடீர் செல்வந்தர்களாகிவிட்டு. ஏதேனும் சட்டச்சிக்கலில் மாட்டும்போது, அவமானத்தை தாங்கமுடியாமல் தற்கொலைசெய்துகொண்டவர்கள் பற்றியும் அறிந்திருக்கின்றோம்.

தற்கொலை என்பது ஒருவகையில் தன்னிலை சார்ந்த விடுதலை மாத்திரமே. எதிர்நோக்கப்படும் பிரச்சினையிலிருந்து தப்பிச்செல்வதற்கான உபாயமாக பெரும்பாலானவர்கள், தற்கொலையை தேர்ந்தெடுக்கின்றனர்.

அவர்கள் உயிரை அவ்வாறு விட்டுவிட்டாலும், அவர்களின் பிள்ளைகள், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களை அந்தச்செயல் எவ்வளவு தூரம் பாதிப்பினை ஏற்படுத்தும் என்பது பற்றியும் சிந்திப்பதில்லை.

ஆங்கிலத்தில், 'Every action has its reaction' எனச் சொல்வார்கள். நாம் எமது சமூகத்திற்கு எதனைச் செய்கின்றோமோ, அதுவே எமக்கு மீண்டும் கிடைக்கும். விஞ்ஞானி ஐசாக் நியூடனும் இது பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறார்.

எமது முன்னோர்கள், "வினை விதைத்தவன், வினை அறுப்பான், திணை விதைத்தவன் திணை அறுப்பான்" எனச்சொன்ன தன் உறைபொருளும், மறைபொருளும் அதுதான்.

எதற்கும் ஒரு பின்விளைவு இருக்கும். அது வாழ்வியலின் அடிப்படை.

எந்தவொரு செயலிலும் இறங்குவதற்கு முன்னர், அதன் பின்விளைவு எவ்வாறு இருக்கும் என ஒரு கணம் சிந்திக்கும் பட்சத்தில் எவரும் எதிர்காலத்தில் வரக்கூடிய சிக்கல்களை முற்கூட்டியே தவிர்த்துக்கொள்ள முடியும்.

உளச்சிக்கல்களுக்கு நிவாரணியாக மருந்துகள், மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும், அவற்றை தொடர்ச்சியாக உட்கொள்வதனால், வேறு பக்கவிளைவுகளும் தோன்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. நடைப்பயற்சி, தியானம், உடற்பயிற்சி, வாசிப்பு, விளையாட்டு, பயணங்கள் என்பன பக்க விளைவுகள் அற்ற மருந்துகளாகும்.

மனவிரக்தியடைபவர்கள், இந்த விடயங்களையும் கவனத்தில்கொள்ளவேண்டும்.

இதற்கும் அப்பால், சமூக சேவைகளில் ஒருவர் தன்னை ஈடுபடுத்திக்கொள்வதன் மூலமும், துயரங்களிலிருந்து விடுபட முடியும்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் ஒரு கவிதை எழுதியிருக்கிறார்.

"தேடிச் சோறுநிதந் தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பலசெயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவ மெய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத் தாயோ?"

தமிழ்நாடு திருநெல்வேலி எட்டயபுரத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த சுப்பிரமணியன், எவ்வாறு உலக மகா கவியானார் என்பதை சீர்தூக்கிப்பாருங்கள்.

அவர் வறுமையில் வாடியவர். எனினும் விரக்தியின் விளிம்புக்குச்செல்லாமல், இறுதிவரையில் சிறந்த கவிதைகளையும் சீரிய சிந்தனைகளையும் எமக்கு விதைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அந்த விதைகளிலிருந்து விருட்சங்களை உருவாக்குவோம்.

சர்வதேச ஆண்கள் தினம் நவம்பர் மாதம் 19ம் திகதியில் உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கடந்த 24 வருடங்களாக இது வழமையில் உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆண்கள் சமூகம் எதிர்நோக்கும் முக்கிய விடயத்தை கருப்பொருளாக அறிவித்து அது பற்றிய விழிப்புணர்வை உலக மட்டத்தில் ஏற்படுத்தும் முகமாக செயற்பட்டு வருகின்றது. இந்த வருடக் கருப்பொருள் 'ஆண் தற்கொலையை பூஜ்ஜியமாக்குதல்'. இதன் பொருட்டாகவே இந்தக் கட்டுரை எமது சமூகத்தில் ஆண்களின் தற்கொலைகள் பற்றிய விழிப்புணர்வை கொண்டு வரும் முக்கிய நோக்கத்தில் எழுதப்பட்டது.



லெ.முருகபூபதி...
letchumananm@gmail.com

# அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை - 2023

தெல்தோட்டைஊடகமன்றமும், அருள்வாக்கிஅப்துல் காதிர் கலை இலக்கியக் கழகமும் இணைந்து வை.எம்.எம்.ஏ. பள்ளேகம கிளையின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்திருந்த 2023ம் ஆண்டுக்கானஅருள்வாக்கிஅப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை (30) கொழும்பு, வை.எம்.எம்.ஏ. கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.







'மலையக வரலாறும், ஈழத்து இலக்கியமும் 'என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்தநினைவுப் பேருரை நிகழ்வினை காப்பியக்கோ டொக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் தலைமையேற்று நடாத்தி வைத்தார். இவ்வருடத்திற்கான நினைவுப் பேருரையினை 'மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியும், மலையக அடையாள உருவாக்கமும்' எனும் தலைப்பில் மலையகஅரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர், எழுத்தாளர், சமூகசெயற்பாட்டாளர், பன்னூலாசிரியர் மற்றும் முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா நிகழ்த்தினார்.

இந்தநிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீம், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மர்ஹூம் எஸ்.எம்.ஏ. ஹஸன் ஆசிரியர் (கல்விஅதிகாரி) எழுதிய அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றிய நூலை இரு முறைஅச்சிட்டு அதனை வெளியிட்ட கல்ஹின்னை தமிழ் மன்றத்திற்கு தெல்தோட்டை ஊடகமன்றமானது, 'அருள்வாக்கி நேசன்' விருது வழங்கி பாராட்டி கௌரவித்தது. மேலும்,அருள்வாக்கிஅப்துல் காதிர் கலை, இலக்கியக் கழகத்தினால் நடத்தப்பட்டமுகநூல் வாசகர்களுக்கான கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற கவிஞர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் அரசஉயர் அதிகாரிகள், கல்வியாளர்கள் ,உலமாக்கள், தொழிலதிபர்கள், ஊடகவியலாளர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.ஏ.எம்.பவாஸ்...
செயலாளர்
தெல்தோட்டைஊடகமன்றம்

# வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி மைதானத்தில் இரு பெரும் விழாக்கள்

களுத்துறை மாவட்டத்திலுள்ள வெலிப்பன்னை மீலாத் கமிட்டியும் நூருத் தீனிய்யாஹ் நிர்வாகமும் இணைந்து நடத்திய மாபெரும் மீலாதுன் நபி விழா மற்றும் பரிசளிப்பு வைபவம் வெலிப்பன்னை ரஹ்மானிய்யா மஹா வித்தியாலய தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.





வெலிப்பன்னையிலுள்ள பண்ணிரண்டு குர்ஆன் மத்ரஸாக்களை ஒன்றிணைத்து நடாத்தப்பட்ட இவ்விழாவில் மாணவர்களின் கிராஅத், தர்ஜுமதுல் குர்ஆன், ஹதீஸ், சந்தர்ப்ப துஆ, பேச்சு, உரையாடல், கஸீதா, வில்லுப் பாட்டு மற்றும் இஸ்லாமிய கலை, கலாசார நிகழ்ச்சிகள் என்பன மேடையேற்றப்பட்டன.



மீலாத் சன்மார்க்க அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இவ்விழாவின் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட். ஏ.எம் பைஸால் கலந்து சிறப்பித்ததுடன் விஷேட பேச்சாளர்களாக பாணந்துறை ஊர்மணை அல்முபாரக் தக்கியாவின் மௌலவி முஹம்மத் இர்ஷாத் ஆலிம் (முஸ்தபவி) மற்றும் பலப்பிட்டி அஹதிய்யா பாடசாலை அதிபர் மௌலவி முஹம்மத் நஸ்மி ஆலிம் (முஸ்தபவி) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவிற்கு அதிபர் முஹம்மத் நௌமான், மத்துகம பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எச்.எம் ரம்ஸான், நூருத்தீனியா பொறுப்பாளர் எஸ்.எச்.எம் இல்யாஸ் மற்றும் முன்னாள் அதிபர்கள், குர்ஆன் மத்ரஸாக்களின் அதிபர்கள், விரிவுரையாளர்கள் பல்துறைகளையும் சார்ந்த பெருமக்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், பள்ளிவாசல்கள் தக்கியாவின் பொறுப்பாளர்கள், ஊர் மக்கள், அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

பேருவளை பீ.எம். முக்தார்...

# எழுத்துலகில் நீண்ட பயணம் செய்த செ.கணேசலிங்கன்: ஈழத்து முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி

பெண்ணுரிமை, அடித்தட்டு மக்கள் வாழ்க்கை, சாதியாதிக்கம், சாதி ஒழிப்பு, சமத்துவம், வர்க்கப்போர், உலகமயமாக்கம், முதலாளித்துவம் போன்ற எல்லாவற்றைப் பற்றியும் தன்னுடைய எழுத்துக்கள் மூலம் எல்லாரிடமும் கொண்டு சென்றவரே செ.கணேசலிங்கன்.

ஈழத்தில் மார்க்சியப் பார்வையுடன் எழுத ஆரம்பித்தோரில் தரமான நாவல்களை தந்தவர்களில் அவரே தலைசிறந்தவர். நாவல், சிறுகதை ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளில் மட்டுமல்லாது சமயம், சமூகவியல், அரசறிவியல், பெண்ணியம், கலை, திறனாய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பெருமளவு எழுதி

## ஈழத்து முற்போக்கு இலக்கிய முன்னோடியும், தமிழ் எழுத்துலகில் நீண்ட பயணம் செய்த– வருமான செ.கணேசலிங்கன் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு (4.12.2021)



நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஈழத் தமிழ் மார்க்சிய எழுத்தாளர் செ.கணேசலிங்கன், உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்.

மார்க்சிய அறிஞர்கள் அன்டோனியோ கிராம்சி, லூயிஸ் அல்துசர் மற்றும் தியோடர் அடோர்னோ ஆகியோரின் எழுத்துக்களால் தாக்கம் பெற்ற கணேசலிங்கன் மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்டவர். அவருடைய எழுத்துக்கள் மார்க்சிய தத்துவப் பார்வையுடன் இருந்தன.

யாழ்ப்பாணம், உரும்பிராயில் மார்ச் 9,1928 இல் பிறந்த கணேசலிங்கன், கல்விப் படிப்பை முடித்த பின்னர், இலங்கை அரசுப் பணியில் சேர்ந்தார். 1950 மற்றும் 1981க்கு இடையில், திருகோணமலை மற்றும் கொழும்பில் பணியாற்றினார். பின்னர், அரச பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

மாணவப் பருவத்திலேயே எழுதும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்ட செ. கணேசலிங்கனின் முதல் கதை 1950 இல் வெளியானது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அவருடைய சிறுகதை தொகுப்பு எழுத்தாளர் மு.வ என்று அழைக்கப்பட்ட தமிழறிஞர் டொக்டர் மு. வரதராசனாரின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது.

கணேசலிங்கனின் முதல் நாவலான நீண்ட பயணம் 1965 இல் வெளிவந்தது. சாதி ஒடுக்குமுறை பற்றி இந்த நாவல் பேசியது. அது அவருக்கு இலங்கை சாகித்திய மண்டலத்தின் விருதைப் பெற்றுத் தந்தது. அவர் 71 நாவல்கள், ஏழு சிறுகதைத் தொகுப்புகள், 22 கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் குழந்தைகள் இலக்கியம் பற்றிய எட்டு புத்தகங்களை எழுதியுள்ளார். இவை மட்டுமில்லாமல் மொழிபெயர்ப்பு நூல்களையும் எழுதியுள்ளார்.

குமரன் பதிப்பகத்தை ஆரம்பித்து அதன் மூலம் பெருமளவு தரமான நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1971இல் குமரன் என்ற மாத இதழை ஆரம்பித்து பொதுவுடமைக் கருத்துக்களுக்கான களமாக அதனை வெளியிட்டுள்ளார். 197183 வரை குமரன் பத்திரிகை இடதுசாரிமார்க்சிய தத்துவத்தை வெளிப்படுத்துவதாக இருந்தது.

எழுத்துலகில் நீண்ட பயணம் செ. கணேசலிங்கன் எழுதிய முதல் புதினமாகும். இது ஈழத்துப் புதினங்களில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இதன் முதற் பதிப்பு 1965 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இவர் இரண்டாவதாக எழுதிய புதினம் சடங்கு, மூன்றாவதாக எழுதிய புதினம் செவ்வானம் 1967 இல் வெளியானது.

இம்மூன்று புதினங்களும் ஒரே குழுவைச் சேர்ந்த ஒரே பிராந்தியத்தை, யாழ்ப்பாணத்தைக் கதைக் களமாகக் கொண்ட புதினங்கள் என்றும் நிலமானிய அமைப்பில் இருந்து முதலாளித்துவ அமைப்புக்கு மாறும் சமுதாயத்தைச் சித்தரிக்கின்ற புதினங்களாக உள்ளன என்றும் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடுகிறார்.

செ. கணேசலிங்கன் "குமரன்" இதழில் எழுதிய குமரனுக்கு எழுதிய கடிதங்கள் பலரினதும் வரவேற்பைப் பெற்றது. பின்னர் இது நூலாகவும் வெளிவந்தது.

1946 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி அதன் செயலாளராய் இருந்து தீவிரமாகச் செயல்பட்டவர். 'சடங்கு' எனும் நாவலில் தொடங்கி 2019 வரை நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளை எழுதியுள்ளார்.




'நீண்டபயணம்' நாவல் சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. 'மரணத்தின் நிழலில்' சிறந்த நூலுக்கான தமிழக அரசின் பரிசைப் பெற்றது. தொ.மு.சி., மு.வ., அகிலன், திரு.வி.க போன்ற தமிழ் இலக்கிய எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகிய எழுத்தாள செ.கணேசலிஙன், மார்க்சிய சித்தாந்தத்தை அடிப்படையாய்க் கொண்டு படைப்புகளைப் படைத்தவர்.

இவரது புதினங்கள் 1980களில் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அவருடைய 'மரணத்தின் நிழல்' நாவலுக்கு தமிழக அரசின் விருது அளிக்கப்பட்டது. சில நூல்கள் தடைசெய்யவும் பட்டன.

1987 மற்றும் 1999க்கு இடையில் எழுதப்பட்ட அவரது பத்து நாவல்கள் இலங்கையில் தமிழ் இனப் பிரச்சினையைப் பேசியது.

எழுத்தாளர் செ.கணேசலிங்கன், அர்த்தசாஸ்திரத்தையும் மாக்கியவல்லியின் இளவரசன் நூலையும், பகத்கீதையையும் திருக்குறளையும் ஒப்பீடு செய்து ஆய்வு நூல் எழுதியுள்ளார். எழுத்தாளரும் கல்வியாளருமான எம்.ஏ.நுஹ்மான் எழுத்தாளர் செ.கணேசலிங்கன் கூறித்து கூறுகையில், “அவரது எழுத்துக்கள் பிரசாரத் தன்மை கொண்டவை என்று விமர்சகர்களில் ஒரு பகுதியினர் கூறினாலும், அரசியலை இலக்கியத்திலிருந்து விலக்க முடியாது என்று நான் கூறுவேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய முதல் நாவல் நீண்ட பயணம். 71 நாவல்கள், 7 சிறுகதைத் தொகுப்புகள், 22 கட்டுரைத் தொகுப்புகள் எழுதியுள்ளார். ஓர் அரசியலின் கதை, அன்னிய மனிதர்கள், அடைப்புகள், சடங்கு, போர்க் கோலம், மண்ணும் மக்களும், இரண்டாவது சாதி, கோடையும் பனியும் அவர் நாவல்களில் சில.

மான்விழிக்கு எழுதிய கடிதம், குந்தவிக்கு எழுதிய கடிதம், நல்லவன், சங்கமம், ஊமைகள், காதல் உறவல்ல பகைமை உறவு, ஒரே இனம், கொடுமைகள் தாமே அழிவதில்லை இவை செ.கணேசலிங்கன் சிறுகதைகளில் சில. பெண்ணடிமை தீர, கலையும் சமுதாயமும், அழகியலும் அறமும், பல்சுவைக் கட்டுரைகள் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் எழுதியுள்ளார்.

நவீனத்துவமும் தமிழகமும், பகவத் கீதையும் திருக்குறளும், கனவுகளின் விளக்கம், குறள் கூறும் பாலியல் கோட்பாடு, மாக்கியவல்லியும் வள்ளுவரும், பெண்ணியப் பார்வையில் திருக்குறள், சித்தர் சித்தாந்தமும் சூபிசமும், அர்த்த சாஸ்திரமும் திருக்குறளும் முதலிய ஆய்வு நூல்களையும் தமிழுலகிற்குத் தந்துள்ளார். 'திரும்பிப் பார்க்கிறேன்' என்ற சுயசரிதை நூலையும் எழுதியுள்ளார். சில பயணக் குறிப்புகள் அமெரிக்கா, இங்கிலாந்து என்ற பயண நூலையும் எழுதியுள்ளார்.

செ. கணேசலிங்கன் 2021 டிசம்பர் 4 அன்று தனது 93ஆவது அகவையில் சென்னை, வடபழனியில் காலமானார். செ.கணேசலிங்கனின் இறப்பு தமிழ் உலகிற்கும் பேரிழப்பாகும்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# கல்முனைநகர லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழா வேலைத் திட்டம்

## காயத்ரி கிராமத்தில் ஆரம்பம்

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா வேலைத்திட்டம் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் லயன்.எம்.சுதர்சன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முதல் நிகழ்வாக திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய காயத்ரி கிராமத்தில் ஐம்பது பேருக்கு 25 சேலைகள் மற்றும் 25 சாரம்கள் வழங்கப்பட்டன .

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழா தலைவர் பொறியியலாளர் லயன். எம். சுதர்சன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.





கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளர் லயன் கலாநிதி எம். கோபாலரெத்தினம், சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும், கழகச் செயலாளர் லயன் எ.எல்.எம்.பாயிஸ், பொருளாளர் லயன் எம்.பரமேஸ்வரநாதன் உள்ளிட்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

காயத்ரி கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சடாட்சரன் நன்றியுரை வழங்கினார்.

அதன் பின்னர் கஞ்சிகுடியாற்றில் மாதாந்த அமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# சூரியனை நோக்கி மூன்று மாதகால பயணம்; இலக்கை நெருங்குகிறது ஆதித்யா விண்கலம்!



சூரியனை ஆய்வு செய்வதற்காக விண்ணுக்கு ஏவப்பட்டுள்ள ஆதித்யா எல் 1 விண்கலம் தனது இலக்கை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆதித்யா எல்1 விண்கலம் எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதியன்று உரிய இடத்தில் நிலைநிறுத்தப்படும் என்று இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ அறிவித்துள்ளது.

ஆதித்யா எல்1 விண்கலமானது புவியிலிருந்து 15 இலட்சம் கி.மீ தொலைவில் உள்ள லெக்ரேஞ்சியன் புள்ளியில் நிலைநிறுத்தப்படும். அங்கிருந்து ஆதித்யா எல்1 விண்கலம் சூரியனை ஆய்வு செய்யும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனின் மேல்வளிமண்டலம் மற்றும் வெளிப்புற அடுக்குகளை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்1 விண்கலம் வடிவமைக்கப்பட்டு கடந்த செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி காலை 11.50 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.விசி 57 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டிருந்தது.

அதன்பிறகு அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் பி.எஸ்.எல்.வி சி 57 ரொக்கெட்டில் இருந்து ஆதித்யா எல்1 விண்கலம் தனியாகப் பிரிக்கப்பட்டு பூமியின் சுற்றுவட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இதையடுத்து மொத்தம் 5 படிநிலைகளில் விண்கலத்தின் புவி சுற்றுவட்டப்பாதை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது. ஆதித்யா எல்1 விண்கலம் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த விண்கலம் பூமியில் இருந்து 15 இலட்சம் கிலோமீட்டர் தொலைவில் லெக்ராஞ்சியன் புள்ளியில் சூரியனை நோக்கி நிலைநிறுத்தப்பட்ட பின்னர் விண்கலத்தில் உள்ள 7 கருவிகள் ஆய்வை மேற்கொள்ளும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர். சூரியனின் மேற்வளிமண்டலம், வெளிப்புற அடுக்கு குறித்த ஆய்வுகளை ஆதித்யா எல் 1 விண்கலம் மேற்கொள்ள உள்ளது.

இதற்கிடையே ஆதித்யா எல்.1 விண்கலம் உயர் ஆற்றல் கொண்ட சூரியக் கதிர்களை படமெடுத்து அனுப்பியிருந்தது. ஆதித்யா எல் 1 விண்கலம் அனுப்பிய இந்த டேட்டாக்கள் சூரிய ஆற்றல் மற்றும் எலக்ட்ரோன் குறித்த ஆய்வினை செய்ய உதவும் எனவும் இஸ்ரோ கூறியுள்ளது.

ஆதித்யா எல்1 விண்கலம் தற்போது இறுதிக்கட்டப் பயணத்தில் உள்ளது.

இதேவேளை இந்தியாவில் விண்வெளி ஆய்வு தொடங்கப்பட்டு 60 ஆண்டு நிறைவு அடைந்துள்ளது. இது தொடர்பாக திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் நடந்த நிகழ்ச்சியில் இஸ்ரோ தலைவர் சோம்நாத் உரையாற்றுகையில், "ஆதித்யா எல்1 விண்கலம் இறுதிக்கட்டப் பயணத்தில் உள்ளது. எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதி எல்1 புள்ளியை ஆதித்யா விண்கலம் சென்றடையும். ஆதித்யா விண்கலம் 125 நாட்களில் 15 இலட்சம் கி.மீ பயணம் செய்துள்ளது" என்று கூறியுள்ளார்.

சந்திரயான் 3 தரையிறக்கத்தின் மூலம் வரலாற்றுச் சாதனை படைத்துள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ, அடுத்ததாக சூரியனை ஆராய்ச்சி செய்யும் ரூபா 424 கோடி மதிப்பிலான ஆதித்யா எல்1 செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பி சாதனை புரிந்து வருகின்றது.

பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து அதன் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## 15 இலட்சம் கி.மீ பயணம் செய்ததும், ஜனவரி 7 ஆம் திகதி உரிய புள்ளியில் நிலைநிறுத்தப்படும்!

ஆதித்யா எல்1 செயற்கைக்கோள் மொத்தம் 7 பேலோடுகளை சுமந்து சென்றுள்ளது. இவற்றில் 4 பேலோடுகள் சூரியனை நேரடியாக ஆய்வு செய்யும். 3 பேலோடுகள் சூரியனின் வெளிப்பகுதி, துகள்கள், எல்1 பகுதி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சூரியனைப் பற்றிய வியப்பான தகவல்கள் ஆய்வில் வெளிப்படும்

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே Lagrange point எனப்படும் ஐந்து புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிகளில் நிலவும் சமநிலை காரணமாக, இங்கு வைக்கப்படும் பொருள் சூரியனால் ஈர்க்கப்படாது. அந்தப் புள்ளிகளில் நிலைநிறுத்தப்படும் பொருட்களுக்கு சூரியனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. அதன்படி, லேக்ரேஞ் புள்ளி 1 (எல்1)இல், இஸ்ரோவின் ஆதித்யா எல்1 செயற்கைகோள் நிலைநிறுத்தப்படவுள்ளது.

புவியில் இருந்து 15 இலட்சம் கி.மீ தொலைவில் உள்ள சூரியனின் எல்1 பகுதியை நோக்கி விண்கலம் சென்று கொண்டிருக்கிறது. எல்1 புள்ளி அருகே சென்றதும் விண்கலம் அதை மையமாக கொண்ட சூரிய ஒளிவட்டப் பாதையில் (Halo Orbit) நிலைநிறுத்தப்பட உள்ளது. அங்கிருந்தபடியே எல்1 பகுதியை மையமாகக் கொண்ட சுற்றுப்பாதையில் வலம் வந்தவாறு சூரியனின் கரோனா மற்றும் போட்டோஸ்பியர், குரோமோஸ்பியர் பகுதிகளை ஆதித்யா ஆய்வு செய்யும். இதற்காக அதில் 7 விதமானஆய்வு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

## ஜப்பானில் நிர்மாணத்துறையில்...

இதற்கமைய ஜப்பானிய வேலை வாய்ப்புகள் இலங்கையருக்கு கிடைக்கவுள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நிர்மாணத்துறைக்காக ஜப்பானில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான குறிப்பிட்ட நிபுணத்துவ பரீட்சையை அறிமுகப்படுத்தும் வகையில்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர் ஏ.எம். ஹில்மியுடன் இணைந்து அமைச்சர் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, இதனைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதல் நடைமுறையிலுள்ள தாதியர் பராமரிப்புச் சேவை, உணவு, விவசாயத்துறை ஆகிய 4 துறைகளில் நிபுணத்துவ பரீட்சைகள் தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அமைச்சர், "ஜப்பான் பல தசாப்தங்களாக எம் நாட்டை ஆதரித்து வருகின்றது. குறிப்பாக, நாம் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நாடு திவாலான போது, மற்ற நாடுகளுக்கு தலைமைத்துவ ம் அளித்து, பாரிஸ் சமூகத்திலும் மற்ற எல்லா இடங்களிலும் கடன் வழங்குபவர்களிடையே பேச்சுவார்த்தையை முன்னெடுத்து, கடனை மறுசீரமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்தது. இதற்கமைய, ஜப்பான் எமக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜப்பானிய பிரதமர் உட்பட அந்நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். ஜப்பானில் தற்போதுள்ள பாதுகாப்பை அவதானிக்கும் போது, ஜப்பான் எமக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகின்றது. அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் ஜப்பானில் வசிக்கின்றனர். மேலும், ஜப்பான் எங்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளுக்கான கதவைத் திறந்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளினுள் ஜப்பானின் வெளிநாட்டு தொழிலாளர் தேவை 145,000ஆக அதிகரித்துள்ளது. எதிர்காலத்தை கருத்திற்கொண்டு ஜப்பானில் இன்னும் அதிகமான வேலைவாய்ப்புகளுக்கான கதவு திறக்கப்படலாம். ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு மிகவும் வலுவானது. அதனாலேயே, இந்த நாட்டிலிருந்து அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை பெற ஜப்பான் ஏற்பாட்டைச் செய்கிறது.

ஜப்பானிய வேலைகளை இலக்காகக் கொண்டு பாடசாலை பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழியை கற்பிக்கத் தேவையான ஆரம்ப அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கு தேவையான ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், ஜப்பானிய மொழியை கற்பிப்பது தொடர்பான நாடளாவிய வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதற்கிடையில் ஜப்பானிய மொழிப் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்துதல் மற்றும் வெளி நிறுவனத்திலிருந்து ஜப்பானிய மொழியைக் கற்று வெளிநாடுகளுக்குச் சென்றால், பணத்தை திருப்பிச் செலுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஜப்பானிய மொழிக் கற்றலை மேலும் வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்குகிறது. அதிக சம்பளம் பெறும் திறன் கொண்ட SSW பிரிவின் மூலம் தாதியர் சேவை, விவசாயம் மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய துறைகளுக்கு மட்டுமே தற்போது வேலைவாய்ப்புகள் உள்ளன. இதன் காரணமாக அந்த துறைகளுக்கு மேலதிகமாக நிர்மாணத் துறை, கட்டடம் சுத்தம் செய்தல் மற்றும் ஆட்டோமொபைல் துறைகளுக்கு SSW அமைப்பை திறக்க பல கோரிக்கைகளை நாங்கள் சமர்ப்பித்தோம். அதன்படி கடந்த காலங்களில் ஜப்பானின் விவசாயம், சுகாதாரம் மற்றும் நீதித்துறை அமைச்சர்கள் உட்பட இந்த விடயங்கள் தொடர்பான அனைத்து அமைச்சர்களையும் சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அதன் பலனாக இன்று இலங்கை இளைஞர்களுக்கு விசேட செய்தியொன்றை வழங்க முடிந்துள்ளது. அதாவது இன்று முதல் இலங்கை இளைஞர்களுக்கான முதற்கட்டப் பரீட்சை நிர்மாணத்துறைக்கான SSW பிரிவின் கீழ் ஜப்பானுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜப்பானிய மொழித்திறன் மற்றும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இத்தேர்வில் தேர்ச்சி பெற்று SSW வகை மூலம் ஜப்பான் செல்ல முடியும். இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், பயிற்சியாளர்களாக ஒரு குழுவாகச் செல்கிறோம். கூடுதலாக SSW பிரிவின் கீழ் சிறப்பு பயிற்சி பெற்ற இலங்கையர்களை நாம் குறிப்பிடுகிறோம். அங்கு SSW பிரிவின் கீழ் வெளிநாடு செல்லும் தொழிலாளர்கள், அவர்கள் பணிபுரியும் துறையில் ஜப்பானிய தொழிலாளர்களுக்கு இணையான சம்பளம் பெறும் வாய்ப்புள்ளது. அதன்படி இன்று முதல் நான்கு மையங்களில் இத்தேர்வுகள் நடைபெறும். M4 தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் இந்த தேர்வில் பங்கேற்க வாய்ப்புண்டு. உண்மையில் அடுத்த 10 ஆண்டுகளில் ஜப்பானில் கட்டுமானத் துறையில் இன்னும் பல வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளன" என்றார்.

## டயானா, ரோஹண, சுஜித்...

இடம்பெற்ற மோதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மூவரையும் ஒரு மாத காலத்துக்கு சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு தடை விதிக்குமாறு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு, சபாநாயகருக்கு பரிந்துரைத்துள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களான ரோஹண பண்டார மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோருக்கிடையில் பாராளுமன்ற வளாகத்தில் கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி இடம்பெற்ற மோதல் தொடர்பிலான விசாரணைக்குழுவின் அறிக்கையிலேயே இவ்விடயம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக விசாரணைக்குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சம்பவம் தொடர்பான ஒலி நாடாக்கள் மற்றும் காணொளி நாடாக்களை கண்காணிக்க ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழு தீர்மானித்ததுடன் அதற்கமைய குறித்த காணொளி பதிவுகளை குழு ஆய்வு செய்தது. பாராளுமன்ற வீடியோ பதிவுகளில் ஒலி பதிவு செய்யப்படாததால், சமூக ஊடக வலையமைப்புகளில் பரப்பப்பட்ட ஒலி நாடாக்கள் மூலம் வீடியோ காட்சிகளை கண்காணிக்க குழு முடிவு செய்தது. அந்த வகையில் குழு தொடர்புடைய வீடியோக்களை அவதானித்தது.

ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு பின்னர் சம்பந்தப்பட்ட விசேட குழுவினால் பெறப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் குழுவினால் அவதானிக்கப்பட்டது. டயானா கமகேயை மூன்று மாதங்களுக்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவது குழுவின் ஏகமனதான தீர்மானமாகும். சுஜித் சஞ்ஜய பெரேராவின் எதிர்வினை குறித்து கடுமையாக எச்சரிக்கப்பட வேண்டும் என குழுவின் பெரும்பான்மை அங்கத்தவர்களினால் தீர்மானிக்கப்பட்டதுடன் அவரை இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் ஒரு உறுப்பினராலும் அவரை இரண்டு மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் இரண்டு உறுப்பினர்களாலும் சபாநாயகரால் கடுமையாக எச்சரிக்கப்படுதல் வேண்டும் என நான்கு உறுப்பினர்களாலும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

காணொளியை ரோஹண பண்டார சமூகமயப்படுத்தியதால் டயானா கமகேக்கு ஏற்பட்ட அவதூறுகளை கவனத்தில் எடுத்ததுடன், ரோஹண பண்டாரவை 2வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் 5 உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டதுடன் அவரை 1 1/2 மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துவதற்கு குழுவின் 2 உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது. இவற்றை கவனத்தில் கொண்டு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு பின்வரும் பரிந்துரைகளை செய்கின்றது. பரிந்துரைகளைத் தீர்மானிக்கும் போது விஜித பேருகொட எம்.பி., குழுக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இங்கு குழு உறுப்பினர்கள் இரு பிரிவுகளின் கீழ் தங்கள் தீர்மானங்களை எடுத்தனர்.

விஜித பேருகொட, தாரக பாலசூரிய, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஜயந்த கெட்டகொட மற்றும், சமன்பிரிய ஹேரத் ஆகியோர் டயானா கமகே, ரோஹண பண்டார மற்றும் கே. சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோரை ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

கபீர் ஹாஷீம், ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தலதா அதுகோரல ஆகியோர் சபாநாயகரால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் எனத் தீர்மானித்தார்கள்.

தவிசாளரான சமல் ராஜபக்ஷ மேற்படி தீர்மானம் தொடர்பில் தனது கருத்தை வெளியிடுவதை தவிர்த்துக்கொண்டார்.

அதன் பிரகாரம் பெரும்பான்மையான குழு உறுப்பினர்களின் முடிவின் படி டயனா கமகே, ரோஹண பண்டார மற்றும் கே. சுஜித் சஞ்ஜய பெரேரா ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 1953 இன் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 28 ஆம் பிரிவின்படி, ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. உறுப்பினர்கள் பெரும்பான்மைக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எனவே குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு மாத காலத்திற்கு பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்பதிலிருந்து இடைநிறுத்துதல் வேண்டும் என ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு பரிந்துரைக்கின்றது.

## பாஸ்டர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு...

சிங்கப்பூரிலிருந்து நாடு திரம்பிய அவர், சர்ச்சைக்குரிய பிரசங்கம் தொடர்பில் நேற்று முன்தினம் (30) 8 மணிநேரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் விளக்கமளித்தார். நேற்று மீண்டும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு சென்று வாக்குமூலம் வழங்கிய போது, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே பாஸ்டர் ஜெரோம் பெர்னாண்டோவை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாஸ்டர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்ய வேண்டாமென நீதிமன்றம் உத்தரவு வழங்கிய பின்னர் அவர் கடந்த புதன்கிழமை (29) காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். அவர் மத நல்லிணக்கத்தை குலைக்கும் வகையில் சர்ச்சைக்குரிய கருத்துகளை கூறியமையால் குற்றப்புலனாய்வு பிரிவு அவரை விசாரணைக்கு உட்படுத்தியிருந்த வேளை கடந்த மே மாதம் 15ஆம் திகதி அவர் நாட்டை விட்டு சிங்கப்பூருக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 245,521 பேர் உயர் கல்விக்கு...

தோற்றியோரில் நூற்றுக்கு 62.63 சதவீதமானோரே உயர் கல்விக்கு தகுதி பெற்றதாகவும் தெரிவித்தார்.

இம்முறை பரீட்சைக்கு தோற்றியோரில் 13 ஆயிரத்து 588 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளதுடன், இது 3.99 சதவீதமெனத் தெரிவித்த அமைச்சர், கடந்த வருடம் அனைத்துப் பாடங்களிலும் 11 ஆயிரத்து 53 பேர் ஏ சித்தி பெற்றதாகவும் இது 3.31 சதவீதமெனவும் தெரிவித்தார். வெளியிடப்பட்டுள்ள பெறுபேற்றுக்கமைய முதலாமிடத்தை கண்டி மஹாமாயா மகளிர் வித்தியாலய மாணவி ஒருவரும் இரண்டாமிடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரி மாணவி ஒருவரும் மூன்றாமிடத்தை கொழும்பு ராயேல் கல்லூரி மாணவர் ஒருவரும் பெற்றுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

நான்காமிடத்தை கொழும்பு ராயேல் கல்லூரி மற்றும் கம்பஹா திருச்சிலுவை மகளிர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பெற்றுள்ளதுடன், ஆறாமிடத்தில் காலி சங்கமித்தா மகளிர் கல்லூரியில் 2 பேர், குருநாகலை மலியதேவ ஆண்கள் வித்தியாலயம், திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவர்களும் பத்தாமிடத்தில் கொழும்பு மியூசியஸ் கல்லூரி மற்றும் கண்டி உயர் மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த இருவரும் உள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அது தொடர்பில் விடயங்களை வெளியிட்ட அமைச்சர், "உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக 3 மாதங்கள் தாமதமானதால் கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் வெளிவர தாமதமாகின.

எனினும், ஓகஸ்ட் மாதம் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு, 3 மாதங்களுக்குள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுத்தமை தொடர்பில் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேவேளை, இறுதியாக வெளியிடப்பட்ட கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கான வெட்டுப்புள்ளி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இன்றைய தினம் (நேற்று) வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் உயர்தர பரீட்சை இடம்பெற்று நீண்ட காலத்துக்கு பின்னரே வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டு வந்துள்ளது.

எனினும் இம் முறை 6 மாதங்களுக்குள் வெட்டுப்புள்ளியை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் எந்த பீடங்களுக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை நள்ளிரவுக்குள் இணையத்தளம் ஊடாக வெட்டுப்புள்ளியுடன் அறிந்து கொள்ள முடியும்" என்றார்.

## 'மஹாபொல' கொடுப்பனவை...

தற்போது இதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு எந்தவிதத்திலும் போதாதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், இதற்கான நிதியானது லொத்தர் சீட்டின் மூலமே பெற்றுக்கொள்ளவதால், லொத்தர் சீட்டு விற்பனையில் ஏற்பட்ட விற்பனை வீழ்ச்சியும் இதற்கு காரணமெனவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஜகத்குமார சுமித்ராரச்சி எம்.பி, எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்த போது, "மஹாபொல புலமைப்பரிசிலானது இது தொடர்பான லொத்தர் சீட்டு விற்பனை மூலமே நிதி பெற்றுக்கொள்ளப்படுகிறது. லொத்தர் சீட்டின் விலை ஒரேயடியாக 40 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதால், அதன் விற்பனையில் சற்று வீழ்ச்சி காணப்படுகின்றது. எனினும், படிப்படியாக அதன் விற்பனை தற்போது முன்னேறி வருகின்றது.மஹாபொல புலமைப்பரிசிலை அறிமுகப்படுத்தியவர் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியாவார். எவ்வாறாயினும், தற்போது வழங்கும் புலமைப்பரிசில் நிதி எந்தவிதத்திலும் போதாது. இதை இரண்டு மடங்குகளாக அதிகரிக்க வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு" இதேவேளை, பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் வராத பல்கலைக்கழகங்கள் தொடர்பாக ஜகத்குமார சுமித்ராரச்சி எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,"பல்கலைக்கழகங்கள் தொடர்பான விடயங்களை முன்னெடுப்பதற்காக உயர் கல்வி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணைக்குழுவில் அரசாங்க பல்கலைக்கழகங்கள் தொடர்பாக தனியான ஒழுங்குபடுத்தலும் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக தனியான ஒழுங்குபடுத்தலும் தொழிற்கல்வி தொடர்பான தனியான ஒழுங்குபடுத்தலும் மேற்கொள்ளவும் இவை அனைத்தும் தொடர்பாகவும் தரநிர்ணயம் மேற்கொள்வதற்கான தனியான நிறுவனமொன்று அமைக்கப்படும்.

## வடக்கு MP க்களுடன்...

உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடலை நடத்தவுள்ளதாக, சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அத்துடன், அங்கு சுகாதாரத்துறை நிலைமையை நேரில் கண்டறிவதற்காக வெகு விரைவில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது, வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்கள் முன்வைத்த சுகாதாரத்துறை வெற்றிடங்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளிட்டவை தொடர்பாக கவனம் செலுத்திய சுகாதார அமைச்சர், அந்த எம்.பி.க்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் நிலவும் சுகாதாரத் துறை பிரச்சினைகள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்த அவர், வடமாகாண அரசியல் பிரதிநிதிகள் அனைவரும் தமக்கு அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் உரையாற்றிய வடக்கு, கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், இம்ரான் மஹ்ரூப் உள்ளிட்டோர், வடக்கு, கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் சுகாதாரத்துறை பற்றாக்குறைகளை சுட்டிக்காட்டி, அவற்றுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தினர்.

## தலைமன்னார் முதல் தனுஷ்கோடிவரை...

வெளியிட்டபோதே, இந்திய உயர்ஸ்தானிகர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் எரிபொருள் குழாய் செயற்றிட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இந்தத் திட்டம் வடக்கு மாகாணத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு திருகோணமலையை சென்றடையவுள்ளது.

இந்தக் குழாய் திட்ட முன்னெடுப்பின் போது, இந்தியா மற்றும் இலங்கையின் எரிபொருள் தேவையை நிறைவேற்றும் விடயத்திலும் கரிசனை வெளிப்படுத்தப்பட்டது. ஆகவே, இதற்கான கோரிக்கை இலங்கையிடமிருந்து வருகின்ற போது இது தொடர்பான நடவடிக்கை அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பான நடவடிக்கை அடுத்த கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் தரைவழிப்பாதை அமைப்பது தொடர்பான விடயத்தை இந்தியா கைவிடவில்லை. இதற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கெனவே நடைபெற்ற நிலையில் தற்போதும் அந்த விடயம் உயிர்ப்புடன் உள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான சத்தியக்கூற்று ஆய்வறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தற்போது ஆராயப்படுவதுடன், இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்ற போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு தொடர்பு மேலும் அதிகரிக்கப்படும். இது இரு தரப்பினருக்கும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மை அளிக்குமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்முனை சீர்திருத்த பாடசாலையில்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இச்சிறுவன், நீதிமன்ற உத்தரவுக்கமைய, அன்றையதினம் கல்முனை சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இச்சிறுவன் கடந்த புதன்கிழமை (நவ. 29) அதிகாலை 3.30 மணியளவில் உயிரிழந்ததாக, சிறுவனின் குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தனது மகனின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகவும் மகன் காயங்களுடன் உயிரிழந்துள்ளதாகவும், சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன், சிறுவனது உயிரிழப்பு தொடர்பான விசாரணை அறிக்கையையும் சட்ட வைத்திய அறிக்கையையும் தமக்கு வழங்க வேண்டுமெனவும், தமது மகனின் உயிரிழப்பில் பல விதமான பொய் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாகவும், சிறுவனின் தந்தை மேலும் தெரிவித்துள்ளார்.

மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவனின் குடும்பத்தினர், தமது பிள்ளைக்கு ஏற்பட்ட நிலைமை வேறு யாருக்கும் நேரிடக் கூடாதெனவும் தமது பிள்ளையின் உயிரிழப்பு தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

## ஆறாம் இடம் பெற்று...

தோற்றிய 9 பாடங்களிலும் ஏ தரச் சித்தியை பெற்ற மாணவி, தேசிய மட்ட சாதனையையும் பெற்றுள்ளார்.

## இன்றைய பலன்கள்

**( 16. 11. 2023 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
அனுகூலமான பலன்கள் உண்டாகும். எடுத்த காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும் வார இறுதியில் வேகம் பிடிக்கும்.



**ரிஷபம்:**
உங்களது செயல்களை யாரும் குறை கூறக்கூடாது என்பதை மனதில் கொண்டு காரியங்களை செய்வீர்கள்.



**மிதுனம்:**
மனோதைரியம் அதிகரிக்கும். சமய சந்தர்ப்பம் அறிந்து காரியங்களை செய்வீர்கள். வீண் கவலைகள் நீங்கும். வழக்கு விவகாரங்களை தள்ளி போடுவது நல்லது.



**கடகம்:**
சுப பலன்கள் உண்டாகும். எடுத்த காரியம் தாமதத்திற்கு பிறகு சாதகமான பலன் தரும். மனோதிடம் உண்டாகூம்.



**சிம்மம்:**
சாமர்த்தியமாக திட்டமிட்டு எதிலும் ஈடுபடுவீர்கள். மனதில் தைரியமும், உற்சாகமும் கூடும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியாக உணவுகளை உண்பீர்கள்.



**கன்னி:**
எதிர்பார்த்த வேலைகள் வேகமாக நடந்து முடியும். சுபச்செலவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நன்மை தரும்.



**துலாம்:**
எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அலைச்சல் இருக்கும்.



**விருச்சிகம்:**
எல்லா வகையிலும் நற்பலன்கள் உண்டாகும். வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும். மனதுக்கு பிடித்தமான காரியங்களை செய்து மனநிறைவடைவீர்கள்.



**தனுசு:**
எண்ணிய காரியங்கள் ஈடேறும். காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பாராத சந்திப்புகள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.



**மகரம்:**
எதிலும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டியது அவசியம். அடுத்தவரை நம்பி எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மையை தரும்.ல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
எந்த விஷயத்திலும் உடனடி தீர்வுகாண முடியாத இழுபறி நிலை காணப்படும். புதியநட்புகள் கிடைக்கும். மனதில் திடீர் கவலை தோன்றும்.



**மீனம்:**
மன உறுதி அதிகரிக்கும். எதிர்ப்புகள் நீங்கும். புதிய தொடர்புகளை உண்டாக்கும். சிலர் புதிய வீடு கட்டும் பணி தொடங்குவார்கள்.

## தெரிவான பல்கலை, பாடநெறி..

அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அத்துடன் பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆரம்ப சுற்றில் 42,105 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் கூறினார். வரலாற்றில் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகம், பாடநெறி போன்றவற்றை அவர்களின் கைத்தொலைபேசிக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (01) பிற்பகல் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2022/2023 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டு (Z) மதிப்பெண்கள் தொடர்பான ஊடக மாநாடு நடைபெற்றது. மேலும் கருத்து தெரிவித்த பேராசிரியர் சம்பத் அமரதுங்க, "பல்கலைக்கழகங்களில் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

## வங்கக்கடல் தாழமுக்கம்...

புயலாக வலுப்பெறும். எதிர்வரும் 4ஆம் திகதி இந்த புயல் சென்னை, மசூலிப்பட்டினம் இடையே ஆந்திராவில் கரையை கடக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்தது.

எனினும், புயல் கரையை கடப்பதில் தாமதம் ஏற்படுமெனவும், அம்மையம் தெரிவித்தது.

4ஆம் திகதி புயல் கடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 5ஆம் திகதி முற்பகலில் ஆந்திராவின் நெல்லூர், மசூலிபட்டினத்திற்கு இடையே கரையை கடப்பதாக கூறப்பட்டுள்ளது.

புயல் கரையை கடக்கும் போது 80 முதல் 90 கி.மீ. வேகத்தில் காற்று வீசுமெனவும், வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்தது.

## பல்கலை அனுமதிக்கான...

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. பல்கலைக்கழக தெரிவுக்கான பெறுபேறுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் https://admission.ugc.ac.lk/selection/ பார்வையிட முடியும்.

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்...

இந்தத் திட்டத்துக்கான முதற்கட்ட நிதி உதவியான 3 மில்லியன் ரூபாவை இந்திய உயர்ஸ்தானிகர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் மாணவப் பிரதிநிதிகளிடம் கையளித்தார். அத்துடன், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர் கல்விப் புலமைப்பரிசில் (ஐ.சி.சி.ஆர்) பெற்று, இந்தியாவில் உயர் கல்விக்காக செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கு அனுமதிக் கடிதத்தையும் அவர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பொருளாதார சவாலை எதிர்நோக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேரின் வாழ்வாதாரத்துக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 5,000 ரூபா நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே 11ஆம் திகதி யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக சென்றிருந்த இந்திய இராஜாங்க அமைச்சர் கலாநிதி எல்.முருகன் அறிவித்தமைக்கமைய, யாழ். பல்கலைக்கழக மாணவர்களில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள 100 மாணவர்களுக்கு விசேட நிதி உதவியை வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்தால் சகல பீடங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்டு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## வெள்ளத்தில் மூழ்கும் வீதிகள்; பொதுமக்கள் அசௌகரியம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் சில தினங்களாக பருவ மழை பெய்து வருவதால் மழைநீர் தேங்கியுள்ள வடிகான்களை துப்புரவு செய்யுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீண்ட காலமாக வடிகான்கள் துப்புரவு செய்யப்படாமல் காணப்படுவதால் மழை நீர் வடிந்தோட முடியாததனால் மாவட்டத்தில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் தோன்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொத்துவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அம்பாறை, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நட்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய கிராமங்களில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது. மழையினால் அநேகமான உள் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு, தாம் போதிகளிலும் வாய்க்கால்களிலும் நீர் பெருக்கெடுத்துள்ளன. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மாலை வேளையில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்கின்றது. கடல் கொந்தளிப்பாக இருப்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

சில பிரதேசங்களில் வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமையால் மழை நீர் வடிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு துர்நாற்றம் வீசுவதாகவும், டெங்கு நுளம்பின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



சம்மாந்துறை பிரதேச மக்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம் அதாஉல்லா, எஸ்.எம்.எம் முஷாரப் எம்.பி உட்பட அரச உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(படம் கல்முனை குறூப் நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு அச்சுறுத்தல்

## ஹரீஸ் எம்.பி உடனடி நடவடிக்கை மாகாண பொறியியலாளர்கள் விஜயம்



சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை போன்று கல்முனை பிரதேசத்திலும் கடலரிப்பு அபாய நிலை ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பில் மீனவ அமைப்புக்கள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசனை தொடர்புகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் கல்முனை பிரதேசத்துக்கு அக்குழுவினர் நேற்று அவர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இக்கள விஜயத்தில் கரையோரம் பேணல் திணைக்கள கல்முனை பிரதேச செயலகத்திற்கான அதிகாரி எம். எச். மப்ரூக், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் பிரதிநிதிகள், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு மீன்பிடி உரிமையாளர், மீனவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம். எஸ். அப்துல் ஹமீட் (நஸீர்), மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியதுடன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுப்பது சம்பந்தமான மதிப்பீட்டறிக்கையை விரைவாக செய்து இவ் வேலைத்திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க தயாராகவுள்ளதாக தெரிவித்தனர். இவ் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க தேவையான நிதியை பெறுவது தொடர்பில் வரவு செலவு திட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காரைத்தீவில்

## 24 மாணவர்கள் 9ஏ சிறப்பு சித்தி

**(காரைதீவு குறூப் நிருபர்)**

க. பொ. த சாதாரண தர பரீட்சை முடிவுகளின் படி காரைதீவு பிரதேச பாடசாலைகளில் மொத்தமாக 24 மாணவர்கள் 9A சித்திகளை பெற்றுள்ளனர்.

காரைதீவு இ.கி.ச பெண்கள் பாடசாலையில் 17 மாணவர்கள் 9ஏ சித்திப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

விபுலாநந்த மத்திய கல்லூரியில் 05 மாணவர்களும் சண்முகா மகா வித்தியாலயத்தில் 02 மாணவர்களும் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஆ.சஞ்சீவன் சிறப்பு சித்திப் பெற்ற 24 மாணவர்களுக்கு தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

## 'ட்ரோன்' தொழில்நுட்பம் பீடைநாசினி வீசும் முறை



**( காரைதீவு குறூப் நிருபர் )**

அம்பாறை மாவட்டத்தில் "ட்ரோன்" தொழில்நுட்பம் மூலம் பீடை நாசினி வீசுகின்ற புதிய நடைமுறை அம்பாறையில் அறிமுகமாகிறது.

அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களம் இது தொடர்பான விளக்க செயல் முறைப் பயிற்சியை நேற்று முன்தினம் அம்பாறையில் நடத்தியது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச விவசாய போதனாசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். விவசாய திணைக்கள பொறியியலாளர் இதற்கான விளக்கத்தையும் செயல்முறை பயிற்சியையும் அங்கு வழங்கினார்.

ஒரு ஏக்கர் வயல் நிலத்திற்கு பீடை நாசினி வீசுவதற்கு நான்கு நிமிடங்கள் போதுமானது என்பதனை இதன் மூலம் அறிய முடிந்தது.

இவ்வாறான விளக்க செயன்முறை பயிற்சிகளை விவசாயிகள் மத்தியிலும் பிரதேச ரீதியாக முன்கொண்டு செல்லப்பட இருக்கிறது.

இப் புதிய தொழில்நுட்ப முறை வேளாண்மை வயலுக்கு மாத்திரமல்லாமல் கரும்பு, சோளம் போன்ற பயிர்செய்கைகளுக்கும் பயன்படுத்த முடியும்.

## சம்மாந்துறையில் 1500ற்கும் மேற்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கி வைப்பு

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**



சம்மாந்துறை பிரதேச செயலாளரின் முயற்சியில் சுமார் 1500ற்கு மேற்பட்ட காணி உத்தரவுப் பத்திரங்கள் இந்த வருடத்தில் இதுவரை சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபயவிக்கிரம தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் 97 க்கும் மேற்பட்ட காணி அளிப்பு மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் சம்மாந்துறை ஜனாதிபதி விளையாட்டு மண்டபத்தில் (28) நடைபெற்றது .

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றும் போது, அரசாங்கம் பொதுமக்கள் நலனுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று அவருக்குரிய வாழ்விடத்தை பெற்றுக் கொள்வது. எனவே நீங்கள் உங்களுடைய குடும்பங்களோடு, பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழ்வதற்காக இந்த அளிப்பு பத்திரங்களை வழங்கி இருக்கின்றோம். இதனை இன்னொருவருக்கு கை மாறுவது அல்லது விற்பனை செய்வது குற்றமாகும்.

அரசாங்கம் பல்வேறு உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன ஆனால் பொதுமக்கள் இவற்றின் மூலம் சரியான முறையில் பயனடைகிறார்களா என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். சம்மாந்துறை பிரதேச செயலகம் சிறப்பான முறையில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கி வருகிறது. இங்கு கடமையாற்றுகின்ற அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் பாராட்டுகின்றேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டதோடு அம்பாறை மாவட்ட மாகாணங்களுக்கிடைப்பட்ட காணி ஆணையாளர் இஸ்திகார் பானு, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் ஆகியோரும் கலந்து கொண்டு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைத்தனர்.

இதில் கிராம சேவைக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர் எம். எல்.தாசிம், சம்மாந்துறை பிரதேச செயலக தலைமை காணி உத்தியோகத்தர் டி.கே.எம். ஜவாஹிர், காணி உத்தியோகத்தர் லாபீர், காணிப் பிரிவின் ஏனைய உத்தியோகத்தர்கள், கிராம சேவக உத்தியோகத்தர், நில அளவை திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பட்டித்திடல் மகா வித்தியாலய மாணவி 9 ஏ சித்தி

**(தோப்பூர் குறூப் நிருபர்)**



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் மூதூர் வலயத்துக்குட்பட்ட பட்டித்திடல் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த T. சாரங்கா என்ற மாணவி 9A சித்தியைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். பட்டித்திடல் பாடசாலை வரலாற்றில் முதன் முதலாக 9A பெற்றுக் கொண்ட மாணவி என்ற சாதனையை இம்மாணவி நிலை நாட்டியுள்ளார்.



க.பொ.த சாதாரணதர பெறுபேற்றின் படி தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட அல் ஹம்றா மத்திய கல்லூரி மாணவன் முஹமட் சஹ்ரான் அஹமட் அனைத்துப் பாடங்களிலும் A சித்திப் பெற்றுள்ளதாக அதிபர் எஸ்.எம்.றஹீம் தெரிவித்தார்.

**(படம் தோப்பூர் குறூப் நிருபர்)**

**(திருகோணமலை தினகரன் நிருபர்)**



திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தர்சனா கோணேஸ் க.பொ.த( சா/த) பரீட்சை பெறுபேறுகளின் படி அகில இலங்கை மட்டத்தில் 6வது இடத்தை பெற்றுள்ளார். பரீட்சைக்கு தோற்றிய 9 பாடங்களிலும் ஏ தரச்சித்தியை பெற்ற மாணவி தேசிய மட்ட சாதனையையும் பெற்றுள்ளார்.

## பிரதேச அபிவிருத்தி வங்கியின் விசா டெபிட் அட்டை அறிமுகம்



**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

வங்கிகளின் செயற்பாடுகளை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டின் ஒரு அங்கமாக பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நேற்றைய தினம் விசா டெபிட் அட்டைகளை அறிமுகம் செய்து வைக்கின்றன. அந்த வகையில் மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்தி வங்கியின் விசா டெபிட் அட்டை அறிமுக நிகழ்வு நேற்று (01 )நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான இந் நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் பி.எம்.டி, சனத், கிழக்கு மாகாண பிரதம முகாமையாளர் சௌமியா திலக உதவி மாவட்ட முகாமையாளர் கே.சத்தியநாதன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு வீசா டெபிட் அட்டையை அறிமுகம் செய்து வைத்தனர்.

நாடு பூராகவும் உள்ள 276 கிளைகளிலும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் வீசா டெபிட் வசதிகளை அறிமுகம் செய்து வைத்ததுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 8 கிளைகளிலும் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. 2011ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் 19ஆம் திகதி மட்டக்களப்பில் பணிகளை ஆரம்பித்த பிரதேச அபிவிருத்தி வங்கி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்களின் வருமான மேம்பாட்டுக்கான பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரம், ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கொக்கட்டிச்சோலை ஆகிய 8 கிளைகளைக் கொண்டு கடந்த 12 வருடங்களாக பணியாற்றுகின்றது.

பிரதேச அபிவிருத்தி வங்கியானது இலங்கையில் 3ஆவது பெரிய வலையமைப்பைக் கொண்டதும் அரசாங்கத்தின் ஒரேயொரு அபிவிருத்தி வங்கியாகவும் இருந்து செயற்படுகிறது.

1985ஆம் ஆண்டு புளத் சிங்கள என்னுமிடத்தில் அப்போதைய நிதி அமைச்சர் ரொனி டி மெல் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வங்கியே பிரதேச அபிவிருத்தி வங்கியாகும்.

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்கள ஆய்வுகளின் அடிப்படையில் இலங்கையின் சனத்தொகையின் 70 வீதமாக உள்ள கிராமிய மக்களை முன்னேற்றுவதற்காக 85ஆம் ஆண்டு களுத்துறை, குருநாகல், மாத்தறை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 18 மாவட்டங்களில் 276 கிளைகளைக் கொண்டு இயங்குகிறது.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தின்

## 'கலைகளின் சங்கமம்' கலை இலக்கிய பண்பாட்டு நிகழ்வு





**(மட்டக்களப்பு விசேட நிருபர்)**

கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் 'கலைகளின் சங்கமம்' கலை இலக்கிய நிகழ்வு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை (30) நடைபெற்றது. கலை, கலாசார , இலக்கிய மற்றும் பண்பாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கில் குறித்த பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கவிதை,பாடல்கள், வில்லுப்பாட்டு, மற்றும் கலாசார பாரம்பரிய நடனங்கள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன் ஓவியப் படைப்புக்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு வருட வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக நடைபெற்ற கலைகளின் சங்கமம் கலை இலக்கிய நிகழ்வு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

ஆற்றுகைகள் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்திய படைப்பாளிகள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலகத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ப.ராஜதிலகன் மற்றும் பத்தகௌரி மயூரவதனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவிச் செயற்றிட்டம் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயினால் நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## வெடிபொருட்கள் மீட்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று பிற்பகல் வெடிக்காத நிலையில் மூன்று மோட்டார் ஷெல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தோட்டக் காணி ஒன்றினை துப்புரவு செய்த போதே மேற்படி ஷெல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தொடர்பாக காணி உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வெடிபொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கஞ்சாவுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய த்தில் கஞ்சா போதைப்பொருளுடன், கிளிநொச்சியைச் சேர்ந்த இ ளைஞனொருவன் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாண பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், பஸ் நிலையத்தில் நின்ற இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போதே, இளைஞனிடமிருந்து ஒரு கிலோ 480 கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளனர். அதனையடுத்து இளைஞனை கைது செய்தனர்.

## எயிட்ஸ் நோயாளர்கள் அதிகரிக்கும் அபாயம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள போதைவஸ்து பாவனையால், எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம் என வடபிராந்திய பாலியல் நோய் தடுப்பு சிகிச்சை நிலைய வைத்திய நிபுணர் வைத்தியர் ஏ. றொகான் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமளவான போதைப்பொருள் பாவனையாளர்கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப்பொருளை ஏற்றிக்கொள்கின்றார்கள். அதனால் எயிட்ஸ் போன்ற தொற்று நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது.

# நெடுந்தீவுக்கு பயணிகள் படகொன்றை வழங்குமாறு இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை

(யாழ். விசேட நிருபர்)




நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்து சேவையை சீராக்கும் வகையில் பயணிகள் படகொன்றினை வழங்குமாறு இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நெடுந்தீவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இதன்போது நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றிலும் அவர் பங்கேற்றார்.

இதன்போதே இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேவிடம் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்து சேவையை சீராக்கும் வகையில் பயணிகள் படகொன்றினை வழங்குமாறு கோரிக்கையை முன்வைத்தார். இந்திய தூதுவரிடம் நெடுந்தீவு மக்களுக்கான குடிநீர் தேவையினை சீராக்கும் வகையில் நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்றை பெற்றுத்தருமாறும் பிரதேச செயலாளர் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இதுதொடர்பான திட்ட வரைபினை தயாரித்து வழங்குமாறும், அதனடிப்படையில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக இந்திய தூதுவர் வாக்குறுதியளித்தார்.

## வெள்ள அபாய எச்சரிக்கை

# தண்ணி முறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறப்பு

### மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

(ஓமந்தை விசேட நிருபர்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற தண்ணிமுறிப்பு குளத்திற்கான நீர்வரத்து அதிகரித்து காணப்படுகின்றமையால் தண்ணிமுறிப்பு குளத்தின் ரேடியல் கதவுகள் 6" இருந்து 9" அளவில் திறக்கப்பட்டுள்ளன.

எனவே தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் பகுதியிலுள்ள மக்கள் குறிப்பாக விவசாயிகள் அவதானமாக இருக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி பயிற்சிநெறி

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவில் இரண்டாம் மொழியினை ஒரு தொகுதி அரச உத்தியோகத்தர்கள் நிறைவு செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் இரண்டாம் மொழி பயிற்சிநெறி வகுப்புக்கள் நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவருகின்றன.

இதன் செயற்பாடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 150 மணித்தியாலங்களை உள்ளடக்கிய இரண்டாம் மொழி பயிற்சிநெறி வகுப்புக்கள் இவ்வருடம் ஆவணி மாதம் ஆரம்பிக்கப்பட்டு முடிவடைந்தது.

இக்கற்கை நெறியானது முல்லைத்தீவு மாவட்ட செயலக அரச கரும மொழிகள் பிரிவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று முடிந்தது.

இக்கற்கை நெறியின் நிறைவு நிகழ்வு கடந்த (30.11.2023) அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக முல்லை மணி மண்டபத்தில் மாவட்ட தேசிய ஒருமைப்பாடு மேம்பாட்டு உதவியாளர் அ.தாமரைச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இக்கற்கையை வழங்கிய அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இரண்டாம் மொழி சிங்கள வளவாளர் செல்வராஜா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரால் கௌரவிக்கப்பட்டதோடு மாணவர்களின் ஆற்றுகையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் திருமதி. லிசோ கேகித, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பொன்னாலை மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது

(யாழ். விசேட நிருபர்)



பொன்னாலையில் மக்களின் வாழ்வாதாரமாகவுள்ள கடற்றொழிலும் கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என சமூக செயற்பாட்டாளர் ந.பொன்ராசா தெரிவித்தார்.

வனவளங்கள் திணைக்களம் அராலி தொடக்கம் பொன்னாலை வரையான 354 ஏக்கர் கடற்கரையோர பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கை தொடர்பாக மக்கள் கருத்தறியும் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

பொன்னாலையிலுள்ள பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பொன்னாலை பரவைக் கடலையே தமது வாழ்வாதாரமாக நம்பியிருக்கின்றனர். மேலும் அதிக குடும்பங்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். வனவளங்கள் பாதுகாப்புத் திணைக்களம் கடற்கரையோரத்தை சுவீகரிக்குமாயின் கடற்றொழிலாளரின் சுதந்திரமான கடற்றொழில் பாதிக்கப்படும். எமது மக்கள் தாம் நினைத்த நேரம் நினைத்த பாதையால் கடலுக்கு செல்வார்கள். நினைத்த நேரம் வீச்சுவலை போன்ற தொழில்களுக்கு செல்வார்கள்.

வனவளங்கள் பாதுகாப்புத் திணைக்களம் கடற்கரையை சுவீகரித்தால் தொழிலாளர்கள் இவ்வாறு செயற்பட முடியாது. கடும் கட்டுப்பாடுகள் மற்றும் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும். மேலும், பொன்னாலைக் கடலில் உள்ள மண் திட்டியான துருத்திப்பிட்டியையும் மேற்படி திணைக்களம் சுவீகரிக்கப்போவதாக அறிவித்திருக்கின்றது.

இது கால்நடைகளில் மேய்ச்சல் தரை மாடுகள் கடல் பகுதியால் நடந்துச் சென்று இங்கு மேய்ந்துவிட்டு மாலையில் வீடு திரும்பும்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் வலைகளை உலர்த்துவதற்கும் இந்த இடத்தை பயன்படுத்துகின்றனர். இதை சுவீகரிப்பதற்கு நாம் அனுமதிக்க மாட்டோம் என அவர் தெரிவித்தார்.

## ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன கண்காட்சி



(மாவத்தகம நிருபர்)



ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஆதரவு தின நிகழ்வு கண்டி சிட்டி சென்டர் வளாகத்தில் அமைந்துள்ள சஹஸ் உயன பூங்காவில் அண்மையில் நடைபெற்றது. கண்டி ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஒருமைப்பாட்டு அமைப்புகளுக்கான சம்மேளத்தின் தலைவர் வசீர் முக்தாது தலைமையில் இக்கண்காட்சி இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மாவட்ட உதவிச் செயலாளர். கண்டி மாநகர ஆணையாளர், முன்னாள் கொழும்பு மாநகர முதல்வர் உமர் காமில் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கண்டியிலுள்ள சிங்கள தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ சிவில் சமூக அமைப்புக்கள், சமயப் பிரதிநிதிகள், புத்திஜீவிகள் என 26 அமைப்புகளின் சம்மேளனம் இதில் கலந்துகொண்டது. இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், கல்வியலாளர்கள், சமயப் பெரியார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### கடும் மழையால் கம்பளையில்

# 18 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் வரை பாதிப்பு

(கம்பளை நிருபர்)

கம்பளை வட்டதெனிய கோணடிக்கா தோட்டத்தில் நேற்று பெய்த கடும் மழை காரணமாக பல வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் கோணடிக்கா விகாரையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர், வீட்டுக் கூரைகள் காற்றில் அள்ளுண்டு போனதுடன் வீட்டு சுவர்களிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளமையால் அப்பகுதியில் மக்கள் வசிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியிலுள்ள 18 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் கோணடிக்கா விகாரையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 200 வருடங்களுக்கு மேல் மேற்பட்ட பழமையான லயன் குடியிருப்பு கூரைகளே இவ்வாறு உடைந்துள்ளதாக தெரியவருகின்றது. இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர், இவர்களுக்கு இந்திய வீடமைப்பு திட்டத்திலாவது வீடுகளை கட்டி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தரம் 08இல் கல்விப் பயிலும் மாணவி ஒருவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி ஒருவரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

மாணவியின் பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள் எனவும், வீட்டிலிருந்து சுய கற்றல் மூலம் மாணவி பரீட்சைக்குத் தோற்றியதாக மாணவியின் தாயார் தெரிவித்துள்ளார்.

## 25 ஆண்டுகளுக்கு பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவியொருவர் சித்தி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 25 வருடங்களுக்கு பின்னர் மாணவியொருவர் பலாங்கொடை கல்வி வலயத்தில் இ/பெட்டிகலை தமிழ் வித்தியாலயத்தில் சித்தியடைந்துள்ளார். பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த சுரேஷ் செல்வராணி என்ற மாணவியே 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

## தபால் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)



ஹற்றன் தபால் நிலைய தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த ஒன்றியம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் நிலையங்களுக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா, கண்டி, காலி, தியத்தலாவ ஆகிய நகரங்களில் அமைந்துள்ள புராதன பெறுமதிமிக்க தபால் நிலையங்களை பாதுகாக்குமாறும் தபால் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்பி இருபதாயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்குமாறு வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஜப்பானிய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஹிதாகி மிசுகோஷிடம் மகஜர் ஒன்றை அண்மையில் கையளித்தார். தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி, ஜப்பான் மொழியினை எமது மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் ஜப்பானிய நாட்டில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தே மகஜரை கையளித்துள்ளார். இச் சந்திப்பானது மிகவும் ஆக்கப்பூர்வமானதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கையில் ஒரே பிரசவத்தில் பிறந்த 6 குழந்தைகளுக்கு ஒரு வருடத்திற்கான குழந்தை பராமரிப்பு பொருட்களை வழங்கிய பேபி செரமி

பெண்களுக்கான காசல் வீதி மருத்துவமனையில், இலங்கையில் இரண்டாவது தடவையாக ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்துள்ளன. பேபி செரமி (Baby Cheramy), குழந்தைகளுக்கு வாழ்க்கையில் சிறந்த தொடக்கத்தை வழங்குவதில் பெற்றோருக்கு ஆதரவளிக்கும் அதன் உறுதிப்பாட்டைக் கடைப்பிடிக்கும் வகையில், இதில் உயிர் வாழும் 5 குழந்தைகளுக்காக, அதன் பெற்றோருக்கு ஆதரவளிக்கும் வகையில், ஒரு வருட காலத்திற்கு தனது முழுமையான குழந்தைப் பராமரிப்பு தயாரிப்புகளை வழங்க உறுதியளித்துள்ளது. பல தசாப்தங்களாக, தங்களது குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் சுகவாழ்வு தொடர்பில், மில்லியன் கணக்கான இலங்கைப் பெற்றோர்கள் பேபி செரமியின் குழந்தைகளுக்கான மென்மையான தயாரிப்புகளின் பராமரிப்பை நம்பியுள்ளனர். இதற்கு முன்னரும், இலங்கையில் முதன் முதலாக ஒரே பிரசவத்தில் பிறந்த 6 குழந்தைகளின் பெற்றோருடன் இணைந்து, அவர்களுக்கும் ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான தயாரிப்புகளை பேபி செரமி நன்கொடையாக வழங்கியிருந்தது.



பேபி செரமி, வர்த்தகநாம முகாமையாளர் ஹிரான் பெப்டிஸ்ட் இது தொடர்பில் தெரிவிக்கையில், "ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகளின் பிறப்பானது ஒரு தனித்துவமான நிகழ்வாகும். புதிய பெற்றோருக்கு குழந்தைப் பராமரிப்பு தேவைகளை பூர்த்தி செய்வது ஒரு சவாலான பணி எனும் வகையில், எமது ஆதரவு அவசியமான ஒரு விடயமாக அமைகின்றது. இக்குழந்தைகளை தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்வதற்காக, ஒரு வருடத்திற்கான, ரூ. 10 இலட்சம் பெறுமதியான பேபி செரமியின் அனைத்து வகையான தயாரிப்புகளையும் பெற்றோருக்கு வழங்குவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். குழந்தைகளுக்கு பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதானது, பெற்றோருக்கும் எமக்கும் முன்னுரிமை வகிக்கும் ஒரு விடயமாகும். அந்த வகையில், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு பாதுகாப்பான, நம்பகமான சூழலை பேபி செரமி வழங்குகிறது." என்றார்.

## தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# வெற்றிகரமாக நிறைவடைந்தது "DIMO Care Camp" உழவு இயந்திர சேவை முகாம்



பெரும் போகத்திற்கு தயாராகும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக, நாட்டின் விவசாயப் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு, DIMO Agribusinesses முன்னெடுத்திருந்த இலவச உழவு இயந்திர சேவை முகாமான, "DIMO Care Camp" அண்மையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

DIMO நிறுவனத்தின் விவசாயப் பிரிவான DIMO Agribusinesses ஆனது உலகப் புகழ்பெற்ற வர்த்தகநாமங்களான Mahindra, Claas போன்றவற்றின் உயர் தரத்திலான விவசாய இயந்திரங்களை இலங்கைக்கு கொண்டு வந்து நாட்டில் விவசாய இயந்திரமயமாக்கலை துரிதப்படுத்துகின்றது. அதிநவீன இயந்திரங்களை வழங்குவதற்கு அப்பால் அதன் அர்ப்பணிப்பை விரிவுபடுத்தும் வகையில், நிறுவனம் விவசாய இயந்திரங்களுக்கான உலகத் தரம் வாய்ந்த விற்பனைக்குப் பின்னரான சேவையை வழங்கி, தொழில்துறையில் இயந்திரமயமாக்கலை மேலும் வலுப்படுத்துகிறது. "DIMO Care Camp" நிகழ்ச்சித்திட்டத்தின் முதன்மையான நோக்கம், விவசாய இயந்திரங்களுக்கான விற்பனைக்குப் பின்னரான சேவைகளை வழங்குவதில் நாம் கொண்டுள்ள விரிவான அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி பெரும்போகத்திற்கு தயாராகும் அனைத்து டிரக்டர் உரிமையாளர்களுக்கும் சிறந்த சேவையை வழங்குவதாகும்.

இந்த நோக்கத்துடன் "DIMO Care Camp" எந்தவொரு உழவு இயந்திரத்தையும் இலவசமாக சரிபார்த்து சேவையை வழங்கியதுடன், பெரும்போகத்திற்கு தயாராகிக் கொண்டிருந்த டிரக்டர் உரிமையாளர்களுக்கு உதிரிப் பாகங்களுக்கு விசேட தள்ளுபடியையும் வழங்கியது.

மட்டக்களப்பு, குருணாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை போன்ற விவசாய மாவட்டங்களை உள்ளடக்கியதாக, 12 நாட்களாக "DIMO Care Camp" நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# நாடளாவிய ரீதியில் சிறுவர் தினத்தை கொண்டாடிய அமானா வங்கி



2023 சர்வதேச சிறுவர் தினத்தை நாடளாவிய ரீதியில் பல்வேறு சிறுவர்களுக்கான விசேட ஈடுபாட்டு நிகழ்வுகளுடன் அமானா வங்கி கொண்டாடியது. தனது கிளை வலையமைப்பினூடாக, பாடசாலைகள், முன்பள்ளிகள், அநாதை இல்லங்கள் மற்றும் பொது இடங்களில் இந்த செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. அமானா வங்கியின் கிளைகள் அமைந்திருக்கும் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுடன் களிப்பூட்டும் தின நிகழ்வுகள், விளையாட்டுகள் மற்றும் பரிசுகளை வழங்கி கொண்டாடியது. களிப்பூட்டும் அம்சங்களுக்கு மேலாக, சிறுவர்கள் மத்தியில் சேமிப்பின் முக்கியத்துவத்தையும் அமானா வங்கி உணர்த்தியிருந்தது. உறுதியான நிதிசார் அடித்தளம் என்பது, பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அத்தியாவசியமானது எனும் நம்பிக்கையின் அடிப்படையில், சிறுவர்கள் மத்தியில் சேமிப்பின் பெறுமதியை உணர்த்துவது பற்றிய தெளிவுபடுத்தல்களையும் வழங்கியிருந்தது.

இது தொடர்பாக வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டாண்மை தொடர்பாடல்கள் தலைமை அதிகாரி அசீம் ராலி தெரிவிக்கையில், "எமது கிளை சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, ஒன்றுக்கு மேற்பட்ட சிறுவர் தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தையிட்டு அமானா வங்கி மகிழ்ச்சியடைகின்றது.

# இலங்கையில் 5 வருடங்களை நிறைவு செய்த Uber Eats

இலங்கையின் மிகவும் பிரபலமான உணவு மற்றும் மளிகைப்பொருட்கள் விநியோக செயலியான Uber Eats, நாட்டில் தனது சேவைகளை வழங்குவதில் 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. கொழும்பு, கண்டி, காலி உள்ளிட்ட இலங்கையிலுள்ள 6 மாவட்டங்களில் கிடைக்கும் இந்த செயலி, கடந்த காலங்களில், இலங்கையில் 32 மில்லியனுக்கும் அதிகமான விநியோகங்களை மேற்கொள்ள உதவியுள்ளது.

இந்த சாதனை இலக்கினைக் குறிக்கும் வகையில், Uber Eats தனது வெற்றியில் விநியோக சேவையாளர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களின் வகிபாகத்தை அங்கீகரித்துள்ளது. அவர்களின் இலக்குகளை அடைய அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவளிக்கும் முயற்சிகள் தொடர்பில் அறிவித்துள்ளது.

இந்தத் தருணத்தில், Uber Eats ஆனது 'Uber Delivery Scholar' திட்டத்தின் மூன்றாவது பதிப்பை அறிவித்துள்ளது. இது விநியோக சேவையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் பாடசாலை உபயோகப் பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளையின் கல்வி செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, சிறப்பான செயல்திறன் கொண்டவர்களுக்கு அவர்களின் பாடசாலைப்படிப்பு முடிவடையும் வரை உதவிகளைப் பெற்றுக்கொள்வது உறுதிப்படுத்தப்படுகின்றது.



# Euromoney Cash Management – Market Leader Award விருதை வென்றது DFCC வங்கி




பரபரப்பாக சுழன்று கொண்டிருக்கின்ற நிதி உலகில், மகத்துவத்திற்கான அங்கீகாரம் என்பது இலகுவில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல. புத்தாக்கம், வாடிக்கையாளர்கள் மீதான ஓயாத அர்ப்பணிப்பு, வணிகங்களில் மாற்றத்திற்கு வித்திடுகின்ற விளைவு, வலுவான விழுமியங்கள் மற்றும் பிரகாசமான எதிர்காலத்திற்கான திடசங்கல்பம் ஆகியன அதற்குத் தேவைப்படுகின்றன. DFCC வங்கியின் iConnect எனப்படும் பண முகாமைத்துவத் தீர்வு (Cash Management Solution) மேற்குறிப்பிட்ட பண்புகள் அனைத்தையும் கொண்டுள்ளதுடன், தொடர்ந்து 3வது ஆண்டாகவும் பெருமதிப்புமிக்க Euromoney Cash Management Market Leader Award 2023 என்ற விருதை தனதாக்கி, அதனை நிரூபித்துள்ளது. இந்த போற்றத்தக்க சாதனையானது, இன்றைய வலுவான பொருளாதாரச் சூழலில் வெற்றிகாண்பதற்கு வணிகளுக்கு வலுவூட்டி, புத்தாக்கம், சேவை நோக்கு மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதியியல் தீர்வுகளின் முன்னோடி என்ற DFCC வங்கியின் ஸ்தானத்தை மீளவும் உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

DFCC iConnect இலத்திரனியல் வங்கிச்சேவை தளமானது, புத்தாக்கத்தின் மீதான அதன் அர்ப்பணிப்பு, பாதுகாப்பான, திறன்மிக்க மற்றும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் பண முகாமைத்துவத் தீர்வுகளை வழங்குவதில் புத்தாக்கமான தொழில்நுட்பத்தின் அனுகூலங்களை தொடர்ச்சியாக பயன்படுத்தல் காரணமாக தனித்துவம் பெற்றுள்ளது. பரிவர்த்தனைகளை சீரமைத்து, ஒருங்கிணைப்பது மாத்திரமன்றி, ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தையும் மேம்படுத்துகின்ற புத்தாக்கமான தொழில்நுட்பங்களை தொடர்ச்சியாக அறிமுகப்படுத்துவில் DFCC iConnect பிரபலம் பெற்றுள்ளதுடன், வணிகங்களைப் பொறுத்தவரையில் டிஜிட்டல் நிதி வழிமுறையில் DFCC வங்கியை முன்னணியில் நிலைநிறுத்தியுள்ளது.

# The Palace Gampaha முன்னணி திட்டத்திற்காக Prime Residencies உடன் இணைந்த Orel Corporation

இலங்கையின் முன்னணி மின்னுபகரண உற்பத்தியாளரான Orel Corporation, நாட்டின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான Prime Residencies உடன் ஒரு மூலோபாய கூட்டாண்மையை அமைத்துள்ளதாக, பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த கூட்டாண்மை தொடர்பான கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் உத்தியோகபூர்வமாக இடம்பெற்றது. இந்த புத்தாக்கமான படியானது, Orel Corporation நிறுவனத்தை வெளிப்புற மின்சுற்று தொகுதிகளுக்கு பொறுப்பான முதன்மை பங்களிப்பாளராக அமைக்கிறது. ஆசியா, ஐரோப்பா, வட அமெரிக்கா உள்ளிட்ட 5 கண்டங்களில் இயங்கி வரும் Orel Corporation, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் உள்ளூர் (குடியிருப்பு) மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான மின் சாதனங்கள்/ துணை உபகரணங்களை வடிவமைத்து உற்பத்தி செய்வதில் நான்கு தசாப்தங்களாக நிபுணத்துவம் பெற்றுள்ளது. அது மாத்திரமன்றி, EM2 பிரிவில் (வடிவமைப்பு, ஆலோசனை, பொருட்கள் விநியோகம், விற்பனைக்கு பின்னரான பராமரிப்பு சேவைகள்) வடிவமைப்பிலிருந்து விநியோகம் வரையான வாடிக்கையாளர் தீர்வுகளை Orel Corporation மேற்கொள்கிறது.



இந்த கூட்டாண்மையானது, Orel Corporation இன் நம்பிக்கையின் நற்பெயரை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதோடு, இது Altair, Lux Resort (Maldives), Access Capital Heights, ITUM, Defense HQ மற்றும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 606 The Address போன்ற முக்கிய மைல்கல் திட்டங்களுக்கு அவர்களது சிறந்த பங்களிப்புக்கான எடுத்துக்காட்டாகும்.

# அஹமதாபாத்தில் பசுமை ஐதரசன் கலப்பு முன்னோட்ட திட்டத்தை ஆரம்பித்த ATGL

2023 நவம்பர் 30 முதல் டிசம்பர் 12 வரை ஐக்கிய அரபு இராச்சியத்தின் காலநிலை மாற்ற மாநாட்டிற்கு (COP 28) உலகத் தலைவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஒன்று கூடி வரும் நிலையில், அதானி குழுமத்தால் இணைந்து ஊக்குவிக்கப்படும் முன்னணி வலுசக்தி மற்றும் நகர எரிவாயு விநியோக நிறுவனமான Adani Total Gas Ltd. (ATGL) மற்றும் TotalEnergies ஆகியன, ஒரு முன்னோடியான 'பசுமை ஐதரசன் கலப்பு முன்னோட்ட திட்டத்தை' ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளன.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, குஜராத்தின் அஹமதாபாத்தில் 4,000 இற்கும் மேற்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு பசுமை ஐதரசனை ($GH_2$) இயற்கை எரிவாயுவுடன் கலப்பதற்கான சமீபத்திய தொழில்நுட்பங்களை ATGL பயன்படுத்தும். புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் உருவாக்கப்பட்ட மின்சாரத்துடன், நீரின் மின்பகுப்பைப் பயன்படுத்தி $GH_2$ உற்பத்தி செய்யப்படுகிறது. ஐதரசன் கலவையானது எரிவாயுவை விட குறைந்த காபன் வெளியீட்டை கொண்டதோடு, அதே வெப்பத்தை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது.



202242025 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஒழுங்குபடுத்தல் அனுமதிகளைப் பொறுத்து பசுமை ஐதரசனின் சதவீதம் படிப்படியாக 8% அல்லது அதற்கும் அதிகமாக அதிகரிக்கப்படும்.

# சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி PLC யினால் நடத்தப்பட்ட ஆற்றல் வெளிப்படுத்தும் நிகழ்ச்சி

இலங்கையின் முதன்மை வங்கியல்லாத நிதி நிறுவனமான (NBFI), People's Leasing & Finance PLC (PLC), சமூகத்தின் மீது அது கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் வகையில், அண்மையில் சர்வதேச சிறுவர் தினத்தை வெகு விமரிசையாகவும் மக்களை ஈர்க்கும் வகையிலும் கொண்டாடியது.

தொடர்ந்து இரண்டாவது முறையாக PLC விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கம் நாடு முழுவதும் உள்ள PLC ஊழியர்களது குழந்தைகளின் ஆற்றலை வெளிப்படுத்தும் போட்டியை நடத்தியது. இந்நிகழ்ச்சி மூலம் எதிர்கால சந்ததியினரின் ஆக்கப்பூர்வமான திறமைகளை வளர்ப்பதில் இந்த நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது.



2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சிறுவர் தினத்தை கொண்டாடும் வகையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்ச்சி சித்திரம், பாடல் மற்றும் நடனம் உள்ளிட்ட பல பிரிவுகளைக் கொண்டிருந்ததோடு, 05, 58, 811, 1114 மற்றும் 1417 ஆகிய ஐந்து வயது பிரிவுகளில் இடம்பெற்றது. இந்த இளம் மற்றும் வளரும் திறமையாளர்களின் ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் பிரதிபலிக்கும் வகையில் சித்திரம் பிரிவில் 63, பாடலுக்கு 42, நடனம் என மொத்தம் 100க்கும் படைப்பாற்றல்கள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டி நிகழ்வின் பொது நியாயமான மதிப்பீட்டு முறை பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் முகமாக, ஒன்பது அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஒரு சுயாதீன நடுவர் குழுவை PLC நியமித்தது.

இக்குழாமில் நியமிக்கப்பட்ட நடுவர்கள் குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் இரத்தினக்கல் தொழில்துறையின் உச்ச அமைப்பு



## SLGJA இன் செயற்பாடுகள்/ COO உப தலைவர் பிராஸ் ஹமீட்

இலங்கை இரத்தினக் கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) ஆனது, இலங்கையின் இரத்தினக் கல் மற்றும் ஆபரணத் தொழில்துறையின் உச்ச அமைப்பாகும். இது, இலங்கை இரத்தினக்கல் வர்த்தகர்கள் சங்கம், இலங்கை நகை உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை பட்டைதீட்டுனர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கம், இலங்கை நகை வர்த்தகர்கள் மற்றும் இரத்தினக்கல் வியாபாரிகள் கூட்டமைப்பு ஆகியவற்றை ஒரே குடையின் கீழ் கொண்டு, 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. SLGJA ஆனது, இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் புத்தாக்கம், நிலைபேறானதன்மை மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தை மேம்படுத்துவதில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான உறுதிப்பாட்டை பெருமையுடன் கொண்டாடுகிறது.

இலங்கையின் இரத்தினக் கல் மற்றும் ஆபரணத் தொழிற்துறையை புத்தாக்கம் மற்றும் நிலைபேறானதன்மையின் மூலம் மேம்படுத்தும் நோக்கில் கட்டமைக்கப்பட்ட SLGJA ஆனது, எதிர்கால சந்ததியினருக்கான செழுமையான பாரம்பரியத்தை நிலைநிறுத்தி, உலகளாவிய அங்கீகாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# கட்டார் வாழ் இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை விருது விழா



















கட்டார் வாழ் இலங்கை மற்றும் இந்திய ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது–2023 விழா ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம். பாஸித்தின் தலைமையில் இந்திய கலாசார மையத்தில் உள்ள அசோகா ஹோலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி, துணிந்தெழு சஞ்சிகை ஆகியவற்றின் ஊடக அனுசரணையில் இடம்பெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீனும் கௌரவ அதிதியாக இந்திய கலாசார மையத்தின் பொதுச் செயலாளர் மோகன் குமாரும் சிறப்பு விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமரும், இலங்கை தேசிய பத்திரிகைகளான தினகரன், தினகரன் வாரமஞ்சரின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், கல்வி, கலை, விளையாட்டு, வணிகம், சமூக செயற்பாடு, ஊடகம், எழுத்து மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சாதித்தோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

# இலங்கை அணியின் பயிற்சி குழாத்தில் இருவர் விலகல்





இலங்கை கிரிக்கெட் அணியின் உடல் சிகிச்சை நிபுணர் கிறிஸ் கிளார்க் ஐரன்ஸ் மற்றும் உடல் செயல் திறன் முகாமையாளர் கிரான்ட் லுடன் பதவி விலகியுள்ளனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட இரு ஆண்டு பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னரே தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டவரான கிறிஸ் கிளார்க் இந்த ஆண்டு ஜனவரியிலேயே இலங்கை அணியின் உடல் சிகிச்சை நிபுணராக பதவி ஏற்றார். இலங்கை அணியுடன் இணைவதற்கு முன்னர் அவர் இங்கிலாந்தின் எசெக்ஸ் கழக அணியின் மருத்துவக் குழு தலைவராக செயற்பட்டுள்ளார்.

மறுபுறம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கிரான்ட் லுடனின் ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது. அவர் இலங்கை அணியுடன் இணைவதற்கு முன்னர் 2014 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு, உடல் தகுதி தொடர்பில் செயற்பட்டு வந்தார். பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

எனினும் இந்தியாவில் அண்மையில் நடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி மோசமான ஆட்டத்தை வெளியிப்படுத்திய நிலையில் அணியின் பயிற்சிக் குழாத்தின் மீது அதிருப்தி அதிகரித்துள்ளது. குறிப்பாக உலகக் கிண்ணத்திற்கு முன்னரும் உலகக் கிண்ணத்தின்போதும் இலங்கை அணியின் பல வீரர்களும் உபாதைக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்கா செல்லும் இந்திய அணி அறிவிப்பு



தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி டெஸ்ட், ஒருநாள், டி20 தொடர்களில் விளையாடவுள்ளது. இந்த மூன்று தொடர்களிலும் ஆடும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் ஷர்மா தலைமையில் டெஸ்ட் அணியும், கே.எல். ராகுல் தலைமையில் ஒருநாள் அணியும், சூர்யகுமார் யாதவ் தலைமையில் டி20 அணியும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வெள்ளைப் பந்து கிரிக்கெட்டிலிருந்து சற்று ஓய்வு வேண்டும் என கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ரோஹித் ஷர்மா மற்றும் விராட் கொஹ்லி ஆகியோர் டெஸ்ட் அணியில் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் தமிழக வீரர் சாய் சுதர்சன், திலக் வர்மா, ரஜத் படிதார் என இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. காயத்தின் தன்மையைப் பொறுத்து ஷமி விளையாடுவது உறுதி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயத்திலிருந்து பாண்டியா இன்னமும் மீண்டு வராத நிலையில், இந்திய டி20 அணியின் தலைவராக சூர்யகுமார் யாதவ் மீண்டும் தேர்வாகியுள்ளார்.

ராகுல் டிராவிட் தலைமையிலான பயிற்சியாளர்கள் குழுவின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களது முதல் பணியாக தென்னாபிரிக்க பயணம் அமையப்போகிறது. டி20 தொடர் டிசம்பர் 10, 12 மற்றும் 14 ஆகிய திகதிகளில் நடைபெறுகிறது. ஒருநாள் தொடர் டிசம்பர் 17, 19 மற்றும் 21 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் டிசம்பர் 26ஆம் திகதியும், இரண்டாவது டெஸ்ட் கேப்டவுனில் ஜனவரி 3ஆம் திகதியும் நடைபெறுகிறது.

# சுப்பர் ஒக்கிட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

**பாலமுனை விசேட, ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்கள்**



பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டு கழகத்தின் உதைபந்தாட்ட இளையோர் அணிக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (27) பாலமுனை ஹிக்மா வித்தியாலய கேட்போர் கூடத்தில் கழகத்தின் தலைவர் எம்.எச் நிஸாருதீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சுப்பர் ஒக்கிட் விளையாட்டு கழகத்தின் இளையோர் உதைபந்தாட்ட வீரர்களுக்கான சுமார் ஓர் இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் அதன் உப தலைவரும், அட்டாளைச்சேனை எச்.எம். ரேடர்ஸ் உரிமையாளருமான எச்.எம் அன்சார் மற்றும் தொழில் அதிபர் ரிப்கான் ஆகியோரால் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் கழகத்தின் ஆலோசகர்களான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச். தம்ஜீது, பொறியியலாளர் எம்.எச். நவுசாத், செயலாளர் ஜே.எம்.சிப்னாஸ், பொருளாளர் கே.எல்.ஹர்சான், உதைபந்தாட்ட அணித்தலைவர் ஆர்.அர்ஹம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் இளையோர் அணி வீரர்களும் கலந்து கொண்டனர்.

டி20 உலகக் கிண்ணம்:

# போட்டிகளை நடத்துவதிலிருந்து விலகிக்கொண்டது டொமினிக்கா



டி20 உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதில் இருந்து மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த டொமினிக்கா விலகியுள்ளது.

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தில் போட்டிகளை நடத்துவதற்கு ஏழு கரீபிய நாடுகளில் ஒன்றான டொமினிக்காவை சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் தேர்வு செய்திருந்தது.

இந்தத் தொடரின் போட்டிகள் அமெரிக்காவின் நியூயோர்க், புளோரிடா மற்றும் டெக்ஸாஸிலும் நடைபெறவுள்ளது. இதன்படி ஐ.சி.சியின் பிரதான போட்டிகள் முதல் முறையாக அமெரிக்காவில் நடத்தப்படவுள்ளது.

எனினும் அனைவரினதும் நலன் கருதி போட்டிகளை நடத்துவதில் இருந்து விலகிக் கொள்வதாக டொமினிக்காவின் விளையாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

“தொடரை ஆரம்பிப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை பூர்த்தி செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்பது வேலைகளை முடிப்பதற்கு பல்வேறு ஒப்பந்ததாரர்களினால் வழங்கப்பட்ட காலத்தை பார்க்கும்போது தெரியவருகிறது” என்று அந்த அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொமினிக்காவின் வின்ட்சர் பார்க் விளையாட்டு அரங்கில் உலகக் கிண்ணத்தின் ஒரு குழுநிலை போட்டி மற்றும் இரண்டு சுப்பர் 8 போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலுடன் இணைந்து போட்டிகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஜமைக்கா உலகக் கிண்ண போட்டிகளை நடத்துவதில் இருந்து பின்வாங்கியது. இதனால் மேற்கிந்திய தீவுகளின் பிரபலமான ஜமைக்க தலைநகர் கிங்ஸ்டனில் உள்ள சபீன பார்க் மைதானத்தில் போட்டிகள் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது.

கரீபிய பிராந்தியத்தில் கிரிக்கெட் ஆடும் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக ஜமைக்கா உள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு சுகததாச மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியின் 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 1500 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வென்ற ஆர்.எம். நிப்ராஸ், மூதூர் பிரதேச செயலாளர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக்கினால் கௌரவிக்கப்பட்டார்.
(படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

# புனித தோமஸ் வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



அம்பாறை டீ.எஸ். சேனநாயக தேசிய கல்லூரிக்கு எதிரான றக்பி போட்டியில் பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

அம்பாறை டீ.எஸ். சேனநாயக தேசிய கல்லூரியில் றக்பி விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் முதன்முதலாக அண்மையில் இப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இப்போட்டியில் பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி 53 புள்ளிகளால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு அயிஸ்லபி எஸ்டேட் நிறுவனத்தின் முகாமையாளர், லஸந்த எதிரிவீர பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# ஸ்டொக்ஸிற்கு சத்திரசிகிச்சை



இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்டொக்ஸ் இடது முழங்கால் காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்துகொண்டுள்ளார்.

இடது முழங்கால் காயம் காரணமாக நீண்ட காலமாக அவதியுறும் 32 வயது ஸ்டொக்ஸ் அந்தக் காயம் காரணமாக ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகியதோடு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி மூன்று ஆஷஸ் டெஸ்டில் பந்துவீசவில்லை. அண்மையில் உலகக் கிண்ண தொடரிலும் துடுப்பாட்ட வீரராக மாத்திரமே களமிறங்கினார்.

இந்நிலையில் ஸ்டொக்ஸ், லண்டனில் உள்ள தனியார் மருத்துவமனையில் முழங்கால் காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இவர் விரைவில் முழு உடற்தகுதி பெறும் பட்சத்தில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்திய மண்ணில் நடக்கவுள்ள 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கலாம்.

இதுகுறித்து ஸ்டொக்ஸ் வெளியிட்ட செய்தியில், “இடது முழங்காலில் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. காயத்தில் இருந்து மீண்டு வர தேவையான மறுவாழ்வு பயிற்சியை விரைவில் ஆரம்பிக்க உள்ளேன்” என தெரிவித்திருந்தார்.

# மகளிர் டி10 தொடரில் சம்பியனானது ரத்னாவலி



எமரல்ட் இன்டர்நசனல் நிறுனத்தின் அனுசரணையுடன் கொழும்பு மாவட்ட மகளிர் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மகளிர் டி10 கிரிக்கெட் போட்டியில் ரத்னாவலி விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

வத்தலை, புனித அந்தோனியார்கல்லூரி மைதனத்தில் அண்மையில் நடந்த இறுதிப் போட்டியில் களுத்துறை அணியையே ரத்னாவலி அணி வீழ்த்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரத்னாவலி அணி 3 விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களை பெற்ற நிலையில் களுத்துறை அணி 2 விக்கெட் இழப்புக்கு 37 ஓட்டங்களையே பெற்றது.

தொடர் நாயகியாக களுத்துறை அணியின் மலீஷா ஹேரத் தெரிவானதோடு இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகி விருதை ரத்னாவலி அணியின் மலீஷா மதுஷானி வென்றார். இந்தத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அணிக்கு அழைக்கப்பட்ட ஷேன் டவ்ரிக் திடீர் ஓய்வு



மேற்கிந்திய தீவுகள் விக்கெட் காப்பாளர் ஷேன் டவ்ரிக் மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் குழாத்திற்கு எதிர்பாராத வகையில் அழைக்கப்பட்டு 10 நாட்களுக்குள் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக இந்த மாதம் நடைபெறும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான 15 பேர் கொண்ட குழாத்தில் 32 வயதான டவ்ரிக் இடம்பிடித்திருந்தார்.

கடைசியாக 2020 இல் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடிய டவ்ரிக் இதுவரை ஒரே ஒரு ஒருநாள் சர்வதேச போட்டியிலேயே ஆடியுள்ளார். “அவரின் பங்களிப்புக்காக ஷேனுக்கு நாம் நான்றியை தெரிவித்துக்கொள்கிறோம்” என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் பணிப்பாளர் மைல்ஸ் பேஸ்கொம்ப் தெரிவித்துள்ளார். 2019 ஆம் ஆண்டில் தனது ஒரே ஒரு ஒருநாள் சர்வதேச போட்டியில் டவ்ரிக் ஆடியபோதும் அவர் 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை மேற்கிந்திய தீவுகளுக்காக 35 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இதில் அவர் மூன்று சதங்களுடன் 1,570 ஓட்டங்களை பெற்றதோடு, அவரது ஓட்ட சராசரி 29.07 ஆகும்.

நாளை (03) அன்டிகுவாவில் ஆரம்பமாகும் இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கு டவ்ரிக்கிற்கு பதில் மாற்று வீரர் தேர்வு செய்யப்பட மாட்டாது என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஒருநாள் தொடர் முடிந்த பின் டிசம்பர் 12 தொடக்கம் 21 ஆம் திகதி வரை இரு அணிகளும் ஐந்து போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் ஆடவுள்ளன.

பங்களாதேஷ் டெஸ்ட்:

# நியூசி. அணி வீரர் ஃபிளிப்ஸ் உமிழ்நீர் பயன்படுத்தி சர்ச்சை



பங்களாதேஷுக்கு எதிரான முதல் டெஸ்டின் நேற்றுமுன்தினம் (30) மூன்றாவது நாள் ஆட்டத்தின்போது, நியூசிலாந்து வீரர் கிளென் ஃபிளிப்ஸ் உமிழ்நீரைப் பயன்படுத்தியதாக சர்ச்சை எழுந்துள்ளது.

பங்களாதேஷ், நியூசிலாந்து இடையிலான முதல் டெஸ்ட் சில்ஹெட்டில் நடைபெற்று வருகிறது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 310 ஓட்டங்களை எடுத்தது. நியூசிலாந்து 317 ஓட்டங்கள் குவித்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 10 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 212 ஓட்டங்களை எடுத்தது. அணித்தலைவர் நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ சதம் பெற்றார்.

மூன்றாவது நாள் ஆட்டத்தில் கிளென் ஃபிளிப்ஸ் உமிழ்நீரைப் பயன்படுத்தியதாக சர்ச்சை எழுந்துள்ளது. 34ஆவது ஓவரின் முதல் பந்துக்குப் பின், ஃபிளிப்ஸ் இருமுறை இந்த செயலில் ஈடுபட்டுள்ளார்.

கள நடுவர்கள் அசன் ராஸா மற்றும் போல் ரைபல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும், ஃபிளிப்ஸ் பந்துவீசுவதற்கு முன் இருமுறை உமிழ்நீரைப் பயன்படுத்தியது தொலைக்காட்சி ஒளிபரப்பில் பதிவாகியுள்ளது. கொரோனாவுக்குப் பின் பந்தில் உமிழ்நீரைப் பயன்படுத்தக் கூடாது என விதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு கடந்தாண்டு ஒக்டோபர் தொடக்கம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன் கடந்த ஆண்டு நவம்பரில் ஐக்கிய அரபு இராச்சியம், நேபாளம் இடையிலான ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சிய வீரர் அலிஷன் ஷரஃபு உமிழ்நீரைப் பயன்படுத்தினார். இதற்கு அபராதமாக நேபாளத்துக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்பட்டன.

## UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2022/2023

### [Based on the results of the G.C.E. (Advanced Level) Examination 2022 (after re- scrutiny)]

Minimum "Z" Scores for selection to various Courses of Study of Universities, in respect of each district

| COURSE OF STUDY / DISTRICT | MEDICINE (University of Colombo) | MEDICINE (University of Peradeniya) | MEDICINE (University of Sri Jayewardenepura) | MEDICINE (University of Kelaniya) | MEDICINE (University of Jaffna) | MEDICINE (University of Ruhuna) | MEDICINE (University of Moratuwa) | MEDICINE (Eastern University, Sri Lanka) | MEDICINE (Rajarata University of Sri Lanka) | MEDICINE (Sabaragamuwa University of Sri Lanka) | MEDICINE (Wayamba University of Sri Lanka) | MEDICINE (Uva Wellassa University of Sri Lanka) | DENTAL SURGERY (University of Peradeniya) | DENTAL SURGERY (University of Sri Jayewardenepura) | VETERINARY SCIENCE (University of Peradeniya) | BIOCHEMISTRY & MOLECULAR BIOLOGY (University of Colombo) | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT (University of Peradeniya) | AGRICULTURE (University of Jaffna) | AGRICULTURE (Eastern University, Sri Lanka) | AGRICULTURE (Rajarata University of Sri Lanka) | AGRICULTURE (Sabaragamuwa University of Sri Lanka) | AGRICULTURE (Wayamba University of Sri Lanka) | FOOD SCIENCE & NUTRITION (Wayamba University of Sri Lanka) | FOOD SCIENCE & TECHNOLOGY (University of Peradeniya) | FOOD SCIENCE & TECHNOLOGY (University of Sri Jayewardenepura) | FOOD SCIENCE & TECHNOLOGY (Sabaragamuwa University of Sri Lanka) | BIOLOGICAL SCIENCE (University of Colombo) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| COLOMBO | 2.4516 | 2.2279 | 2.1465 | 2.0526 | 1.8790 | 1.9559 | 1.8732 | NQC | 1.8772 | 1.8894 | 1.9152 | NQC | 1.8311 | 1.8337 | 1.7345 | 1.7704 | 1.1759 | 0.4638 | 0.4158 | 0.5911 | 0.6993 | 0.5923 | 1.0529 | 1.5034 | 1.4434 | 1.3571 | 1.5982 |
| GAMPAHA | 2.4412 | 2.2347 | 2.1566 | 2.0517 | 1.7278 | 1.9550 | 1.8707 | 1.6406 | 1.8547 | 1.6816 | 1.6890 | 1.6473 | 1.6275 | 1.6219 | 1.6011 | 1.5980 | 1.2040 | 0.4618 | 0.4227 | 0.5781 | 0.6872 | 0.6036 | 1.1113 | 1.5113 | 1.4441 | 1.2593 | 1.6014 |
| KALUTARA | 2.4446 | 2.2204 | 2.1474 | 2.0514 | 1.7840 | 1.9559 | 1.8732 | 1.7783 | 1.8995 | 1.7850 | 1.7711 | NQC | 1.7698 | 1.7682 | 1.7211 | 1.7372 | 1.2884 | 0.6491 | 0.7903 | 0.5987 | 0.6924 | 0.5923 | 1.2161 | 1.5138 | 1.4433 | 1.4426 | 1.5932 |
| MATALE | 2.4981 | 2.2150 | 2.1943 | 2.0612 | 1.7073 | 1.9778 | NQC | 1.6524 | 1.8604 | 1.6800 | 1.6921 | 1.6520 | 1.6329 | NQC | 1.5648 | 1.5588 | 1.2325 | 0.6560 | NQC | 0.6104 | 0.7378 | 0.6231 | 1.1317 | NQC | NQC | 1.1763 | NQC |
| KANDY | 2.5501 | 2.2216 | 2.1512 | 2.0545 | 1.8169 | 1.9598 | 1.8827 | NQC | 1.8509 | 1.8032 | 1.8229 | NQC | 1.7860 | NQC | 1.7446 | 1.7709 | 1.3487 | 0.7642 | 0.6029 | 0.6183 | 0.7021 | 0.6098 | 1.0935 | 1.5677 | 1.4696 | 1.1115 | 1.6031 |
| NUWARA ELIYA | NQC | 2.2598 | NQC | 2.0969 | 1.7308 | 1.9775 | 1.9286 | 1.4296 | 1.9025 | 1.6837 | 1.7319 | 1.3830 | 1.3891 | 1.3789 | 1.3253 | 1.3150 | 1.1548 | 0.4627 | 0.3495 | 0.6258 | 0.9751 | 0.6297 | 1.0887 | NQC | NQC | 1.0500 | NQC |
| GALLE | 2.4478 | 2.2429 | 2.1503 | 2.0791 | NQC | 1.9552 | 1.8728 | NQC | 1.9071 | NQC | 1.8661 | NQC | 1.8319 | 1.8340 | 1.7523 | 1.7812 | 1.3090 | 0.6394 | 0.6045 | 0.5857 | 0.7423 | 0.5863 | 1.1207 | 1.5440 | 1.4435 | 1.4051 | 1.5974 |
| MATARA | 2.4552 | 2.2225 | 2.1557 | 2.0508 | NQC | 1.9550 | 1.9130 | NQC | 1.9079 | 1.9005 | NQC | NQC | 1.8405 | 1.8535 | 1.7211 | 1.7361 | 1.3705 | 0.6099 | 0.5849 | 0.5798 | 0.7077 | 0.5887 | 1.1777 | 1.6068 | 1.4624 | 1.3730 | 1.6141 |
| HAMBANTOTA | 2.4711 | 2.2846 | 2.1643 | 2.0508 | 1.7765 | 1.9606 | 1.9222 | 1.8366 | 1.8525 | 1.7698 | NQC | NQC | 1.7587 | 1.8254 | 1.7457 | 1.7306 | 1.3042 | 0.8231 | 0.6204 | 0.6221 | 0.7067 | 0.6287 | 1.1177 | 1.5091 | 1.4433 | NQC | 1.6106 |
| JAFFNA | 2.4504 | 2.2120 | 2.1968 | NQC | 1.8724 | NQC | 2.0797 | NQC | NQC | NQC | NQC | NQC | 1.8086 | NQC | 1.7379 | 1.7859 | 1.3043 | 0.6679 | 0.6728 | 0.7215 | 0.6964 | 0.6797 | 1.2116 | 1.5054 | 1.4820 | NQC | 1.6491 |
| KILINOCHCHI | NQC | 2.3267 | 2.1972 | NQC | 1.7943 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.6660 | NQC | 1.6479 | 1.5353 | 1.2744 | 0.5958 | 0.4655 | 0.8534 | NQC | NQC | 0.7893 | NQC | NQC | 1.1019 | NQC |
| MANNAR | NQC | NQC | NQC | 2.1087 | 1.7335 | NQC | NQC | 1.6845 | NQC | 1.7070 | 1.8481 | NQC | 1.6619 | NQC | 1.5410 | 1.5458 | 1.2453 | 0.4667 | 0.3943 | NQC | 0.7442 | 0.8777 | 1.1268 | NQC | NQC | 1.2822 | NQC |
| MULLAITIVU | NQC | 2.2786 | NQC | NQC | 1.8819 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.7586 | NQC | 1.6464 | 1.3834 | 1.2566 | 0.6176 | 0.7097 | NQC | NQC | NQC | 0.9633 | NQC | NQC | 1.3428 | NQC |
| VAVUNIYA | 2.5134 | 2.2496 | 2.1503 | NQC | 1.8433 | 1.9671 | 1.8938 | 1.9934 | 1.9980 | NQC | NQC | NQC | NQC | 1.8206 | 1.7615 | 1.7945 | 0.6477 | 0.5199 | 0.4281 | NQC | NQC | NQC | 0.9612 | NQC | NQC | 1.0429 | NQC |
| TRINCOMALEE | 2.4637 | 2.2480 | 2.1783 | 2.0533 | 1.7138 | 2.0044 | 1.8843 | 1.7370 | 1.8620 | NQC | 1.7552 | NQC | 1.6686 | NQC | 1.6649 | 1.6639 | 1.0878 | 0.4674 | 0.4730 | NQC | NQC | 0.6900 | 1.1347 | NQC | NQC | 1.1645 | NQC |
| BATTICALOA | 2.4902 | 2.2518 | 2.1621 | 2.0571 | 1.8226 | 1.9614 | NQC | 1.8413 | 1.8601 | NQC | NQC | NQC | 1.7962 | NQC | 1.7456 | 1.7530 | 1.1553 | 0.5724 | 0.5697 | NQC | 0.7723 | 0.5791 | 1.1750 | NQC | NQC | 1.2097 | NQC |
| AMPARA | 2.4374 | 2.2384 | 2.1690 | 2.0536 | 1.8321 | 1.9566 | 1.8997 | 1.8369 | 1.8566 | 1.8048 | 1.8216 | NQC | 1.7816 | NQC | 1.7268 | 1.7033 | 1.3184 | 0.5844 | 0.6102 | 0.5905 | 0.7557 | 0.5914 | 1.2193 | NQC | NQC | 1.1779 | 1.6068 |
| PUTTALAM | 2.4946 | 2.2805 | 2.1698 | 2.0552 | 1.7175 | 1.9578 | 1.9381 | 1.6762 | 1.8496 | 1.6839 | 1.6873 | NQC | 1.6623 | NQC | 1.6574 | 1.6201 | 1.1835 | 0.4726 | 0.3803 | 0.6016 | 0.9017 | 0.5783 | 1.1472 | NQC | 1.4971 | 1.0350 | 1.6170 |
| KURUNEGALA | 2.4450 | 2.2314 | 2.1529 | 2.0517 | 1.8028 | 1.9594 | 1.8901 | NQC | 1.8596 | 1.8020 | 1.8038 | NQC | 1.7860 | NQC | 1.7427 | 1.7739 | 1.3325 | 0.6497 | 0.6270 | 0.6290 | 0.6898 | 0.6308 | 1.1517 | 1.5090 | 1.4671 | 1.3214 | 1.6216 |
| ANURADHAPURA | 2.5466 | 2.2347 | 2.1850 | 2.0651 | 1.7109 | 1.9552 | NQC | 1.5146 | 1.8506 | 1.6791 | 1.6969 | 1.5985 | 1.5063 | NQC | 1.4687 | 1.5009 | 1.2957 | 0.4627 | 0.4504 | 0.6045 | 0.7015 | 0.5884 | 1.0755 | NQC | NQC | 1.0521 | NQC |
| POLONNARUWA | 2.4695 | 2.2591 | 2.1774 | 2.1071 | 1.7355 | NQC | 1.9909 | 1.4283 | 1.9345 | NQC | 1.6921 | 1.3959 | 1.3714 | NQC | 1.3329 | 1.3170 | 1.2649 | 0.5278 | 0.3220 | 0.6089 | NQC | 0.5797 | 1.1110 | NQC | NQC | 0.9454 | NQC |
| BADULLA | 2.5455 | 2.2159 | 2.1671 | 2.0619 | 1.7099 | 1.9626 | NQC | NQC | 1.8525 | 1.6845 | 1.6892 | NQC | 1.6678 | NQC | 1.6002 | 1.6644 | 1.3423 | 0.5294 | 0.5394 | 0.5930 | 0.7380 | 0.5809 | 1.1170 | NQC | NQC | 1.1412 | 1.6537 |
| MONARAGALA | NQC | 2.2410 | NQC | 2.1015 | 1.7277 | 1.9757 | NQC | 1.6018 | 1.8706 | 1.6825 | 1.6948 | NQC | 1.5849 | NQC | 1.5756 | 1.5776 | 1.2858 | 0.4781 | 0.4486 | 0.5756 | 0.7958 | 0.6198 | 1.2099 | 1.5401 | 1.4761 | 1.3009 | NQC |
| KEGALLE | 2.4552 | 2.2150 | 2.1465 | 2.0600 | 1.8226 | 1.9616 | 1.9286 | 1.8207 | 1.8510 | 1.7998 | 1.7702 | NQC | 1.7513 | NQC | 1.7214 | 1.7437 | 1.2670 | 0.6261 | 0.6326 | 0.5952 | 0.7120 | 0.5924 | 1.1986 | 1.5336 | 1.5023 | 1.2941 | 1.6180 |
| RATNAPURA | 2.4542 | 2.2112 | 2.1586 | 2.0526 | 1.7520 | 1.9571 | 1.8706 | NQC | 1.8509 | 1.7541 | 1.7803 | 1.8407 | 1.7434 | 1.7317 | 1.7202 | 1.7147 | 1.2033 | 0.5341 | 0.5334 | 0.5829 | 0.6883 | 0.5902 | 1.1127 | 1.5053 | 1.4642 | 1.2154 | 1.5955 |

* Selection 100% on an all Island Merit Basis # Courses of Study for which the subject oriented Practical Tests / Aptitude Tests were conducted.

**NQC - No Qualified Candidates. This may be due to the following reasons.**

1. District quota for a given course of study in a given district has already been filled by the students of that district.
2. Number of places in a given course of study in a given university has already been filled by the students with higher Z-scores from other districts.
3. No candidates who have satisfied the minimum requirements for admission for a given course of study from that district.

Note :
Certain courses of study are not conducted in all three languages. Therefore some students may not get selected to such courses of study in some universities, even though they have obtained the minimum Z-score required to get selected.

UNIVERSITY GRANTS COMMISSION
01/12/2023

## UNIVERSITY ADMISSION - ACADEMIC YEAR 2022/2023

### [Based on the results of the G.C.E. (Advanced Level) Examination 2022 (after re- scrutiny)]

Minimum "Z" Scores for selection to various Courses of Study of Universities, in respect of each district

